பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 21 | ஞாயிற்றுக்கிழமை 07.10.2018 | கதிர் 335

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக் காலையில் 'காலைக் கதிர்' நாளிதழை மின் அஞ்சலில் பார்த்த நண்பர் ஒருவர் நேரத் துடன் செய்தி ஒன்றை அனுப்பி யிருந்தார்.

"என்ன, தலைப்பும், செய்தியும் 'ரைப் – செட்' பண்ண ஆள் இல்லை என்று கருதி, சரியாக ஒரு வருடத் துக்கு முந்திய பக்கம் 03 >>>

# ஐக்கியத் தீர்வா அல்லது தனிநாடா? வடக்கு – கிழக்கில் கருத்துக்கணிப்பு



## வேண்டும் என்கிறது ஐக்கிய சோசலிசக் கட்சி

கொழும்பு, ஒக்ரோபர் 07

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வா அல்லது தனிநாடா என்பது குறித்து வடக்கு, கிழக்கில் வாழும் மக்களி டையே கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி தென்னிலங்கையிலுள்ள இடதுசாரி கட்சி யொன்று தீர்மானம் நிறைவேற்றவுள்ளது.

சிரேஷ்ட இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான சிறிதுங்க ஜயசூரிய தலைமை யிலான ஐக்கிய சோசலிசக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் கொழும்பில் நடை பெறவுள்ளது. இதன்போதே மேற்படி யோசனை முன் மொழியப்பட்டு அது தீர்மானமாக நிறைவேற்றப்படவுள்ளது.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டம் குறித்தும், கட்சியின் மாநாடு சம்பந்த மாகவும் - கொழும்பிலுள்ள 'காலைக்கதிர்' செய்தியாளருக்கு வழங்கிய குறுகிய செவ்வியிலேயே சிறிதுங்க ஜயசூரிய வால் மேற்படி தகவல்கள் வெளியிடப்பட் டன. பக்கம் 14 >>>

## இலங்கையை அண்மித்து வலுவாகிறது தாழமுக்கம்

கொழும்பு, ஒக். 07

அரபிக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் மேலும் வலுவடைந்து பக்கம் 14 >>>

## ராணுவ உயர்மட்டம் பெரும் குழப்பத்தில்!

### படைத் தலைமை அதிகாரிக்கு வழங்கிய சேவை நீடிப்பினால்

கொழும்பு, ஒக். 07

இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோவுக்கு, ஜனாதி பதி மைத்திரிபால பக்கம் 14 >>>

## வடக்கு ஆளுநர் லண்டனில் தமிழரைச் சந்திக்க எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 07

வடக்கு மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே லண்டனில் தமிழ் மக்களுடன் நடத்தத் திட்டமிட்ட சந்திப்புகள், பக்கம் 14 >>>

## மைத்திரி–மஹிந்த சந்திக்கவேயில்லை

### பொய்த் தகவல் என்கிறார் எஸ்.பி.

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதாக வெளியான செய்தி உண் மைக்குப் புறம்பானது பக்கம் 14 >>>

## நிதிமோசடி விசாரணைப் பிரிவை உடனே கலைக்கவேண்டும் அரசு



### மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 07

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவைக் கலைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

அது சட்டவிரோதமான நிறுவனம் எனவும், அதற்கு எதிராக உயர் பக்கம் 14 >>>

## புலமைப்பரிசில் பரீட்சைக்காக பிள்ளைகளை வதைக்காதீர்கள்!

### ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பிள்ளைகளின் எதிர்காலத் தைத் தீர்மானிக்கும் ஒரேயொரு தடை தாண்டல் பரீட்சை என்று பெற்றோர் கள் நம்புகின்ற காரணத்தால் நாட் டின் சிறுவர் தலைமுறை பெரும் சிர மங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

கண்டி முன்மாதிரி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற் றும்போதே பக்கம் 14 >>>

## மைத்திரிபாலவுடன் மஹிந்த மூடிய அறைக்குள் சந்திப்பு!

### கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இரகசியச் சந்திப்பு ஒன்று இடம் பெற்றிருப்பதாக அரசியல் வட்டாரங் களை மேற்கோள்காட்டி 'சிறிலங்கா மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு முன்னாள் அமைச் சர் எஸ்.பி. பக்கம் 14 >>>

## இலங்கைக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியில் ஜப்பான்

கொழும்பு, ஒக். 07

இந்தியப் பெருங்கடலில் ஜப்பானிய கடற்படை, இலங்கைக் கடற்படையுடன் இணைந்து நான்கு நாள்கள் கூட்டுப் பயிற்சி ஒன்றை இன்று ஆரம்பிக்கவுள்ளதாக, ஜப்பானின் ஜிஜி பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பக்கம் 14 >>>

## இந்தோனேசியாவில் ஆயிரம் பேர் மாயம்!

### உயிரோடு புதைந்து இருக்கலாமென அச்சம்



ஜகார்த்தா, ஒக்.07

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக் கம் மற்றும் சுனாமியில் சிக்கி ஆயிரம் பேரைக் காணவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. சுனாமியின் போது அவர்கள் மண்ணில் பக்கம் 14 >>>

## மைத்திரியை நம்பமுடியாது கூறுகின்றது கூட்டு எதிரணி

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி மைத்திரிபாலவை நம்ப முடியாது எனக் கூட்டு எதிரணி தெரிவித் துள்ளது. அந்த அணியின் பக்கம் 14 >>>

# இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டில் அமெ., சீனா உயர் அதிகாரிகள் பங்கேற்பு!

இலங்கையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இந்து சமுத்திரப் பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டு நிகழ்வில் அமெரிக்கா மற்றும் சீனாவின் உயர் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர் என இலங்கையின் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு உதவி ஆலோசகர் பன்காஜ் சரன், அமெரிக்காவின் ராஜாங்க திணைக்கள உதவி செயலாளர் எலிஸ் ஜி வெல்ஸ், சீனாவின் வெளியுறவு அமைச்சின் கடல் வலய திணைக்கள பணிப்பாளர் இ சியான் லியாங் ஆகியோர் இந்த மாநாட்டு நிகழ்வில் பங்கேற்க வுள்ளனர்.

இந்து சமுத்திரமும், எதிர்கால முக்கியத்துவமும் என்ற தலைப்பில் இந்த மாநாடு ஒக்டோபர் 11 ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் நடைபெறவுள்ளது.

இதன்போது இந்து சமுத்திர பாதுகாப்பு உட்பட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இந்த மாநாடு இலங்கையின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில்



# உலகளாவிய ரீதியில் பல நாடுகளைப் பின்தள்ளி இலங்கையின் தேசிய விமான சேவை முன்னிலை!

கொழும்பு, ஒக். 07

உலகளாவிய ரீதியில் பல நாடுகளை பின்தள்ளி இலங்கையின் தேசிய விமான சேவை முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் சரியான நேரத்தில் அதிக சதவீத விமான பயணங்களை மேற்கொண்ட விமான சேவையாக ஸ்ரீலங்கன் விமான சேவை முதலிடம் பிடித்துள்ளது.

flightstats.com நிறுவனத்தினால் மேற்கொணவிசேடஆய்விற்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதற்கமைய கடந்த செப்டெம்




பர் மாதம் ஸ்ரீலங்கன் விமான சேவையின் பயணங்களில் நூற்றுக்கு 91.37 வீதமான பயணங்கள் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அந்த நிறுவனத்தின் விமான பயணத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய விமான சேவைகளின் பிரிவுகளின் கீழ் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளின் மிகபெரிய விமான சேவைகளும் இந்த தரவிற்காக இணைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் டெல்டா விமான சேவை இந்தத் தரவிற்கமைய இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

அத்துடன், ஜப்பான் விமான சேவையான ஏ.எல்.ஏ விமான சேவை மூன்றாம் இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முப்படைகளின் தளபதிகளை சந்தித்தார் பாகிஸ்தானிய பாதுகாப்பு செயலாளர்!



இலங்கைக்கு வந்துள்ள பாகிஸ்தானிய பாதுகாப்பு செயலாளர் இக்ரம் உல் ஹக், நேற்று இலங்கையின் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

படைகளின் பிரதம அதிகாரி அட்மிரல் ரவீந்திர விஜேகுண ரட்ண, விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் கபில் ஜயம்பதி, இராணுவ தளபதி மகேஷ் சேனாநாயக்க, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஸ்ரீமேவன் ரணசிங்க ஆகியோரை அவர் சந்தித்துள்ளார்.

இந்தநிலையில் பாகிஸ்தானிய பாதுகாப்பு செயலாளர் இலங்கையில் இருதரப்பு பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பை நடத்தியுள்ளார்.



# வவுனியா நகரசபையினால் சோலைவரி நிலவை அறவீடு!

வவுனியா, ஒக்.08

வவுனியா நகரசபையினரால் கடந்த பல வருடங்களாக சோலை வரி பெற்றுக்கொள்ளாத வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த இரண்டு நாள்களாக நகர் பகுதிகளில் நகரசபை உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை 2018.09.06/07 இலக்க சபை தீர்மானத்திற்கு அமைய நகரசபை செயலாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது வரை வவுனியா நகரசபைக்கு சோலை வரி நிலுவை செலுத்தப்படாதவர்களுக்கு எதிராக நகரசபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255 பிரிவு 170 இன் பிரகாரம் நகரசபை உத்தியோகத்தர்களினால் நடுக்கட்டு நடவடிக்கையாக ஆடம்பரப் பொருட்கள் கையேற்கப்பட்டு அவற்றை ஏல விற்பனை செய்வதன் மூலம் சோலை வரி நிலுவையைச்சீர் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நகரிலுள்ள பல வியாபார நிலையங்களுக்கு எதிராக கடந்த இரண்டு நாள்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை சீனா கடன்பொறியில் தள்ளவில்லை!

## சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

நிதியை வழங்கி சீன அரசு, இலங்கை அரசை கடன் பொறிக்குள் கொண்டு செல்லவில்லை என்று சீனாவுக்கான இலங்கை தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

சீனாவின் CGTN ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

சீன அரசு எமக்கு நிதியை வழங்கி, இலங்கையை கடன் பொறிக்குள் தள்ளியது என்று, யாராவது கூறுவார்களாயின், அந்தக் கருத்துடன் நான் இணங்கமாட்டேன்.அது நிச்சயமாக தவறான முடிவு.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை கட்டுவதற்கு சீன அரசாங்கம் உதவியுள்ளது. சாத்திய ஆய்வுகளின் அடிப்படையில் அதற்கான முடிவை இலங்கை அரசே எடுத்தது. நிச்சயமாக, கடனைத் திருப்பிச் செலுத்துவதில் நாங்கள் சிக்கலை எதிர்கொள்கிறோம். எவ்வாறாயினும், சீன அரசு , துறைமுகத்தைத் தம்மிடம் தருமாறு கேட்கவில்லை. அந்த யோசனை இலங்கையிடம் இருந்தே முன்வைக்கப்பட்டது. பங்குடமை அடிப்படையில் செயற்படுவது பற்றி சீனாவிடம் கேட்கப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவமயப்படுத்துகிறது என்ற ஊடகங்களின் குற்றச்சாட்டு பொய்யானது.

இது தனியே பொருளாதார முயற்சி மாத்திரம்தான் என்று, ஆரம்பத்திலேயே நாங்கள் சீன தரப்பிடம் தெளிவாக கூறியிருந்தோம்.

இலங்கையின் பாதுகாப்பு விடயங்களில் யாரையும் தலையீடு செய்வதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எமது கடற்படைத் தளத்தை மாற்றுவதற்கு, கடந்த ஜூலை மாதமே முடிவு செய்திருக்கிறோம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு, இந்தியப் பெருங்கடலில் சிறிலங்காவின் பிராந்திய ஒருமைப்பாடு என்பன ஒட்டுமொத்தமாக இலங்கை ஆயுதப்படைகள் கவலைப்பட வேண்டிய விடயங்கள்.

இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்க சீனா ஒருபோதும் கேட்கவில்லை. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் யாரும் இல்லை என்று தமிழ்க்கூட்டமைப்பிடம் கூறிவிட்டோம்!

## தலதா அத்துகோரள தெரிவிப்பு

இலங்கையில்அரசியல்கைதி கள் என்று எவரும் இல்லை என, நான் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினருக்குத் திட்டவட்ட மாகத் தெரிவித்து விட்டேன் என நீதியமைச்சர்தலதா அத்துகோரள கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகச்சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதி லளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது போன்று, அரசியல் கைதிகள் என்று யாரும் சிறைச் சாலைகளில் இல்லை.

பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்ட வர்களும் நீதிமன்ற விசாரணை யில்இருப்பவர்களும்விசாரணைக் காக காத்திருப்பவர்களும் தான் சிறைகளில் உள்ளனர்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க வுடன், தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நடத்திய சந்திப்பின் போது, இதனைநான்தெளிவாகஎடுத்துக் கூறினேன்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் களின் மனக்குறைகளைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை களையும் அவர்களுக்கு விளங் கப்படுத்தியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவும், சிறைச் சாலைகளில் அரசியல் கைதி கள் என்று எவரும் இல்லை எனத் தெரிவித்து வந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்பை அப்படியே அதே தி கதியில் திரும்பவும் பிரசுரித்து விட்டீர்களா?" – என்று கேள்வி எழுப்பினார்.

அவர் சுட்டிக்காட்டிய விட யத்தை அவதானித்த போது எனக்கும் ஆச்சரியமாக இருந்தது. Coincidence என்றதற்செயல் நிகழ்வுதான் இது.

*"தீர்வில்லையேல் நாடு மீண் டும் வன்முறையை நோக்கி நக ரும். – பிரிட்டன் அமைச்சரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு"* – இது நேற்று (06.10.2018) எமது முன் பக்கத் தலைப்புச் செய்தி.

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் 06.10.2017 அன்று 'காலைக்கதிர்' முன்பக்கத்தலைப் புச் செய்தி என்ன தெரியுமா? *''அரசியல் தீர்வில் தவறினால் மீளவும் வன்முறை வெடிக்கும். பிரிட்டன் அமைச்சரிடம்சம்பந்தன் எடுத்துரைப்பு"* – என்பதுதான்.

இரண்டு தலைப்புகளுமே அச்சொட்டாக ஒரே மாதிரி அமைந் திருந்தன. இரண்டு செய்தியிலும் குறிப்பிடப்பட்ட பிரமுகர்கள் ஒரே ஆள்கள்தான்.

2017 ஒக்டோபர் 5 ஆம் திகதி யும், சரியாக ஒரு வருடம் கழித்து 2018 ஒக்டோபர் 5 ஆம் திகதியும் சம்பந்தன் சந்தித்த பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர்தான். பிரிட்ட னின் ஆசிய மாறும் பசுபிக் பிராந் தியங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட்தான் அவர்.

போன வருடம் நடந்த சந் திப்பின்போது சுமந்திரன் எம்.பி. உடனிருக்கவில்லை. இந்த வருடம் – நேற்று முன்தினம் – நடந்த சந்திப்பில் சுமந்திரன் கலந்து கொண்டிருக்கின்றார்.

இத்தகைய இணைச் செய்தி கள் ஒரு வருட வித்தியாசத்தில் ஒரே திகதியில் பிரசுரிக்கப்பட்டுள் ளமையை, வழக்கமாகத் தமிழ்க் கூட்டமைப்புத் தரப்பைக் கடுமை யாக விமர்சிக்கும் ஒரு நண்பரே நேற்று நேர காலத்துடன் எமக் குச் சுட்டிக் காட்டினார்.

இரண்டு தினங்களினதும் பத்திரிகையின் தலைப்புச் செய்தி களைப் படம் பிடித்து சமூக வலைத் தளத்தில் உலவவிட்ட நண்பர் அவற்றின் கீழ் சில கிண்டல் குறிப்புக்களையும் பிரசுரிக்கத் தவறவில்லை.

ஒன்று – *"நாங்கள் அன்று சொன்னதைத்தான் இன்றும் சொல்கிறோம். என்றும் சொல்லிக் கொண்டேயிருப்போம்"* – என அமைந்தது.

மற்றொன்று *"மேலே உள்ள செய்திப் படங்களில் ஐந்து வித்தி யாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள். 1 – திகதியில் வருட வேறுபாடு. 2 – ஒன்றில் 'பிரிட்டிஷ் அமைச்சரிடம்' என்று உள்ளது. மற்றதில் 'பிரிட்டன் அமைச்சரிடம்'"* என்று உள்ளது.

–இப்படி அவரின் கிண்டல் சமூக வலைத்தளத்தில் தொடர்கின்றது.

**- மின்னல் -**

# பொருண்மிய மேம்பாட்டுக்கான உதவியை வழங்கினார் ரவிகரன்




முல்லைத்தீவு, ஒக். 07

அன்றாட பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்கோடு வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 26 ஆயி ரம் பெறுமதியில், தீர்த்தக் கரை பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜெயராசா யாசோதா என்ற பய னாளிக்கே இவ்வுதவி வழங்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட தொழில் துறைத்திணைக்கள உத்தியோகத் தர் செல்வராசா சஞ்சீவன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பயனாளி கலந்துகொண்டு ரவி கரனிடமிருந்து தையல் இயந்திரத் தைப் பெற்றுக்கொண்டார்.

# கமநல காப்புறுதி சபை கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஒக். 07

கிளிநொச்சி மாவட்டத்தில் கமத் தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்துக்குள் இந்த அலு வலகம் திறந்து வைக்கப் பட்டது. அலுவலகத்தை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, பிரதி விவசாய அமைச்சர் அங் கஜன் இராமநாதன், மீள்குடியேற் றப் பிரதி அமைச்சர் காதர் மஸ் தான், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டவர்களால் உத்தியோக பூர்வமாக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

நெல், சோளம், கச்சான், பெரிய வெங்காயம், போஞ்சி, ஆகிய ஆறு பயிர்களுக்கும் தற் போது காப்புறுதி வழங்கப்படு கிறது. எதிர்காலத்தில் வாழை, சின்ன வெங்காயம், உழுந்து உள்ளிட்ட பயிர்களையும் காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என விவசாய அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# மஹிந்தவின் உறுப்புரிமை நீக்கப்படும்

கொழும்பு, ஒக். 07

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றால் நாடாளுமன்ற மற்றும் கட்சி உறுப்புரிமையை நீக்குவதே மத்திய செயற்குழுவின் நிலைப்பாடாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

ஆயினும் மஹிந்த சுதந்திரக் கட்சிக்கு எதிராகச் செயற்பட மாட்டார் என்ற அதீத நம்பிக்கை உள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அரசின் செயற்பாடுகளை குழப்புவதற்குக் கூட்டு எதிரணியினர் பல்வேறு வகையிலும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையிலேயே பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை மஹிந்த ஏற்பார் எனத் தெரிவித்து வருகின்றனர். – என்றார் அவர். (ஐ)

# வவுனியாவில் பெண்கள் ஆளுமையை கட்டியெழுப்புவதற்கான கருத்தமர்வு




வவுனியா, ஒக். 07

'இயல்திறனை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்' என்னும் தொனிப்பொருளில் வவுனியா வில் பெண்களுக்கான கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.

கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட் மனாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நெல்லி ஸ்ரார் விருந்தினர் விடுதி யில் இந்தக் கருத்தமர்வு இடம் பெற்றது.

பெண்களின் ஆளுமைத்தி றனைக் கட்டியழுப்புவது, அவர் களின் திறமைகளை வெளிக் கொண்டு வருவது, பெண்கள் சமூகத்தில் ஆற்றிவரும் அரசி யல், பொருளாதாரப் பங்களிப்பு, நாட்டின் தலைவர்களாக இருந்து தேசத்தைக் காப்பாற்றிய பெண் களின் தலைமைத்துவப் பண்பு கள் என்பன தொடர்பாக இதில் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கருத்தமர்வில் வள வாளர்களாக வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியின் ஓய்வு நிலைபீடாதிபதி கெ.சிதம்பரநாதன், கபே அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜெ.விஜய குமார், சாவகச்சேரி பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(ஐ-100)

## மஹிந்தவின் புதல்வர்களின்

# பயணப் பொதி காவிய தூதுவரை திருப்பி அழைக்குமாறு அழுத்தம்!

மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு புதல்வர்களையும், கட்டார் விமான நிலையத்தில் வரவேற்று அவர்களின், பயணப் பொதிகளைக் காவிச் சென்ற, கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் ஏ.எஸ்.பி. லியனகேயை திருப்பி அழைக்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கட்டார் விமான நிலையத்தைச் சென்ற டைந்த மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களான யோசித ராஜபக்ஷ மற்றும் ரோகித ராஜபக்ஷ ஆகி யோரை, கட்டாருக்கான இலங்கை தூதுவர் ஏ.எஸ்.பி. லியனகே வர வேற்று, அவர்களின் பயணப்பொதி களைக் காவிக்கொண்டு சென்றார்.

இது தொடர்பான ஒளிப்படங் கள் வெளியானமையை அடுத்து, அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன.

சில அமைச்சர்கள், கட்டாருக் கானதூதுவரின் இந்தப் படங்களை, ஜனாதிபதி மைத்திரியின் கவ னத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

யோசித ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ ஆகியோரின் பயணப் பொதிகளை காவியதன் மூலம், ஒட்டுமொத்த அரசையும் ஏ.எஸ்.பி. லியனகே அவமானத்துக்கு உள் ளாக்கி விட்டார் என்றும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# 'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' விவசாய மீள்எழுச்சி ஆரம்பம்



விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாயப் பிரதி அமைச் சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கிளிநொச்சி மாவட் டத்துக்கு நேற்று விஜயம் மேற் கொண்டனர். 'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' என்ற தொனிப்பொரு ளில் வடக்கின் துரித விவசாய மீள் எழுச்சி என்னும் எண்ணக் கருவில் கமத்தொழில் அமைச் சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களையும் இவர்கள் ஆரம் பித்து வைத்தனர்

நேற்று மாலை கிளிநொச்சி இரணை மடு விவசாயப் பண் ணைக்கு சென்ற விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாய பிரதி அமைச்சர் அங் கஜன் இராமநாதன், வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் உள்ளிட்ட பிரமுகர்கள் கமத் தொழில் அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துக்கான வேலைத்திட்டத்தை பார்வையிட்டு நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து இரணை மடு விவசாயப் பண்ணைக்குத் தேவையான சூரிய மின்கலத்தை யும் செயற்பட வைத்தனர்.(ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதியின் சங்கட நிலைமை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஏதேனும் வழியில் பதவி நீக்கம் செய்து விட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புத் தலைமையில் ஆட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதாவது, நல்லாட்சி அரசைக் கவிழ்த்து விட்டு, சுதந்திரக் கட்சி பிறிதொரு அரசு அமைக்க வேண்டும் என்பதே இக் கோரிக்கை.

இவ்விடயம் குறித்து, ஐ.ம.சு.கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் என்றும் –

மேற்படி யோசனை சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஆறுமுகம் தொண்டமான், அதாவுல்லா, சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டோர் அடங்கிய ஐவர் குழு ஒன்று அக்கலந்துரையடல்களின் முடிவில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் –

செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் பல தோணிகளில் கால் வைத்து நிற்கின்றார் என்பது தெளிவாகுகின்றது.

ஒருபுறம், 2020 வரை தற்போதைய நல்லாட்சி தேசிய அரசு தொடரும் என்கின்றார் அவர்.

மறுபுறம், அந்த அரசைக் கவிழ்த்து விட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசு ஒன்றை அமைக்கும் யோசனை தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஒன்று கூடி அவர் ஆராய்கின்றார்.

பிறிதொரு புறம், தமது சுதந்திரக் கட்சியுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவையும் ஒன்றிணைத்துக் கொண்டு, ஐ.தே.கட்சிக்கு மாற்றான அரசு ஒன்றை நிறுவுவது குறித்தும் அவர் தீவிரமாக ஆராய்கின்றார் எனத் தகவல்கள் வெளிவருகின்றன.

தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்கான பாதை குறித்து ஒரு திட்டவட்டமான – தெளிவான – தெரிவு இல்லாத சங்கடத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாட்டிக்கொண்டு முழிக்கின்றார் என்பதையே இத்தகைய, நாலாபுறச் சிந்தனையிலான அவரது அணுகுமுறை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, தமது நிறைவேற்று அதிகாரஜனாதிபதிப்பதவி மூலம் தானேபதவிவிலக்குவதற்கான சட்ட அதிகாரம் தமக்குக் கிடையாது என்பதை இப்போது நன்கு புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணிலை அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கு அவரது அரசை நாடாளுமன்றத்தில் வீழ்த்துவதே இப்போதைக்குத் தமக்கு உள்ள ஒரே மார்க்கம் என்பதை உணர்ந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை – இன்றைய நிலையில் இதுவரை – அவரது தலைமையில் அவரது ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக்குழு கட்டுக்கோப்பாக இருக்கின்றது. அதன் உறுதியான ஆதரவு அவருக்கு உண்டு. அதனைப் பிளப்பது உடனடிச் சாத்தியமான காரியமல்ல.

தவிரவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற கட்சிகளும் இன்றைய நிலையில் ரணிலின் அரசை வீழ்த்தும் சிந்தனையில் – நிலைப்பாட்டில் – இல்லை.

இந்தப் பின்புலத்தில், நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் அரசுக்கு மாறான தரப்பினர் ஒன்று திரண்டு நாடளுமன்றத்தில் பெரும்பான்மையை எட்டுவதோ, அதன் மூலம் ரணிலின் அரசை வீழ்த்திப் புதிய அரசை அமைத்து ஆட்சியைக் கைப்பற்றுவதோ இப்போதைக்குச் சாத்தியப்படக் கூடிய விடயமாகத் தோன்றவில்லை.

நல்லாட்சி அரசிலிருந்து மைத்திரிபால சிறிசேனவின் தரப்பில் எஞ்சியிருக்கும் சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் வெளியேறினாலும் கூட, நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசு பெரும்பான்மையை இழந்து, அது கவிழ்ந்து விடும் என்று கருதுவதும் துர்லபமே.

எவ்வாறு, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவை – அவராக விரும்பிப் பதவியிலிருந்து வெளியேறினாலன்றி – பதவியை விட்டு அகற்றவே முடியாது என்பது உண்மையோ, அதே மாதிரி, இன்றைய நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தானாக விரும்பிப் பதவி விலகினாலேயன்றி அதனை ஆட்சிக்கட்டிலிருந்து வீழ்த்துவதும் சாத்தியமேயற்றதாகும்.

இந்த உண்மை புரிந்தபடியால்தான் நல்லாட்சி அரசைக் கவிழ்க்கும் திட்டங்கள், பேச்சுக்கள், முயற்சிகள் சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழு எம்.பிக்களான எஸ்.பி.திஸநாயக்கா, சுசில் பிரேமஜயந்த போன்றோரால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட போதும் அவை குறித்துப் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல், மௌனம் பேணி, அரசியல் விடயங்கள், நகர்வுகள் குறித்து அமைதி காத்து நிற்கின்றது ரணிலின் தரப்பு.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமது அரசியல் எதிர்காலம் யாது என்று தெரியாத அரசியல் அவல நிலையில் தடுமாறும் ஜனாதிபதி சிறிசேன, அதனால் சாத்தியமாகக் கூடியவை எனத் தோன்றும் பல தோணிகளில் கால் வைத்து நிற்கின்றார் என்பது அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கின்றது.

# தமிழர் பிரதேசங்களைச் சிங்களமயமாக்குவது நாட்டில் அரசியல் அமைதியை நிலைநாட்டாது

## சுட்டிக்காட்டுகிறார் வரதராஜப் பெருமாள்



யாழ்ப்பாணம், ஒக்.07

ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும், அரச நிர்வாக மற்றும் அரச படைகளின் அதிகாரிகளும் தமிழர்களின் பிரதேசங்களைச் சிங்கள மயமாக்க முயற்சிப்பது இந்த நாட்டில் அரசியல் அமைதியை நிலைநாட்டாது. அது தேசிய நல்லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை ஆகியவற்றுக்கு எதிரானது.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு–கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் செயலருமான அ.வரதராஜப் பெருமாள்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் கொண்டிருந்த தமிழர்களின் நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்யும் திட்டமிட்ட நோக்குடனேயே முன்னர் வெலிஓயா என ஆரம்பிக்கப்பட்ட அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயம் யுத்தத்தின் காரணமாக அரசினால் தொடர முடியாமற் போய்விட்டது. இப்பொழுது திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் கணிசமான அளவு நிலப் பகுதிகளை ஒருங்கிணைத்த வகையில் ஒரு விரைந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே. இந்தப் பகுதிகள் அரசின் குடியியல் நிர்வாகங்களின் கீழில்லாமல் அரச படைகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

1983க்கு முதல் ஒரு சிறிய அளவிலேயே சிங்களவர்கள் வெலி ஓயா திட்டத்தில் குடியேற்றப்பட்டிருந்தனர். ஆனால் 2009க்குப் பின்னர் அரச படையினரின் பாதுகாப்புடனும் துணையுடனும் மிகப் பெருந் தொகையில் தென்னிலங்கை மாவட்டங்களிலிருந்து சிங்களவர்கள் அழைத்துவரப்பட்டு, தேவையான உதவிகள் அனைத்தையும் அரசு வழங்கி, விவசாய மற்றும் குடியிருப்பு நில உறுதிப் பத்திரங்களையும் கொடுத்து, குடியேற்றியிருப்பதாகக் கூறப்படுகிறது. அதன் முழு விவரங்களையும் பெற முடியாத அளவுக்கு அப்பகுதிகள் அரச படைகளின் பாதுகாப்பு வலயங்கள் போல் நிர்வகிக்கப்படுகின்றன என்பதும் உண்மை.

அப்பகுதிகளில் யாருக்கும் நிலம் வழங்கப்படவில்லை, வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி அண்மையில் கூறியுள்ளார். அது, உண்மை என ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஜனாதிபதியின் தலைமையில் அமைந்துள்ள வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கடந்த கூட்டத்தில் ஜனாதிபதி, அப்பகுதிகளில் தமிழர்கள் சட்டப்படியாக கொண்டிருந்த நிலங்கள் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படும் என உறுதியளித்திருக்கிறார். குறிப்பிட்ட தமிழர்கள் சட்டப்படி கொண்டிருந்த காணிகள் அவர்களுக்கு மீள வழங்கப்படுதல் என்பது ஒரு விவகாரமே.

அதற்கும் மேலாக,

அரசின் பாரிய அரச உதவியுடனான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொடர்ச்சியை இல்லாமல் செய்வதுவும், குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களினதும் இணைந்த பெரும் நிலப்பரப்பை வடக்கு, கிழக்கிலிருந்து துண்டாடி வடமத்திய மாகாணத்தோடு இணைக்கும் முயற்சிகளுமே இவ்விடயத்தில் உள்ள பிரதானமான பிரச்சினைகளாகும்.

வடமத்திய மாகாணத்தில் காலம் காலமாக விவசாயம் செய்து வந்துள்ள சிங்களவர்களில் நிலமற்றோர் தாங்களாக தங்களது மாவட்டத்துக்கு அண்மித்த மாவட்டங்களை நோக்கி தமது பொருளாதார வாழ்வுக்காக இடம் பெயர்ந்து, குடியேறி காட்டு நிலங்களை களணிகளாக்கி தமது இருப்பை அமைத்துக் கொள்வது வேறு விடயம். எனினும், இவ்வாறான ஒன்றை தமிழர்கள் மேற்கொள்கிறபோது அரச படைகள் அனுமதிப்பதில்லை. அரச நிலங்களெல்லாம் அரச படைகளுக்கும் சிங்களவர்களுக்குமே சொந்தமானவை என்பதுபோல அரசபடைகள் நடந்து கொள்ளும் விடயத்தில் அரசு தலையிடுவதுமில்லை.

அரச நிலங்களில் எந்தவொரு துண்டையேனும் எந்தவொரு நபருக்கு வழங்குவதாயினும் அதனைத் தீர்மானிப்பது மாகாண சபையே என்பதுதான் இலங்கையின் அரசியல் யாப்பு வழங்கியிருக்கும் அதிகாரம். ஆனால் இது மத்திய அமைச்சர்களாலும் மதிக்கப்படுவதில்லை. எந்தவொரு ஜனாதிபதியாலும் இதுவரை மதிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சரி, மாகாண சபைகளும் சரி அது பற்றி எந்தவொரு குரலையும் உரிய அரங்கங்களில் இதுவரை எழுப்பியதில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இங்கு அடுத்து வரும் தேர்தல்களுக்கான வாக்குவேட்டைக்காக சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிரானவர்கள் போல் வீதி அரசியல் நாடகங்களை அரங்கேற்றுகிறார்களே தவிர, மாகாண சபைகளுக்கு அரச நிலங்கள் மீது அரசியல் யாப்பு பூர்வமாக உள்ள அதிகாரங்களை நிலைநாட்டி தமிழர் பிரதேசங்களின் தனித்துவத்தை நிலைநாட்டுவதற்கான எந்தவொரு முயற்சியும் தமிழர் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்படவில்லை என்பது துரதிஷ்டமான ஒன்றாகும்.

வடக்கு–கிழக்கு மாகாணங்களின் தொடர்ச்சி பாதிக்கப்படாமல், இந்த மாகாணங்களின் நிலப்பரப்புகள் ஏனைய மாகாணங்களுடன் எதிர்காலத்தில் இணைக்கப்படும் நிலைமை ஏற்பட விடாமல் தடுப்பது அவசியம்.

அதற்கு அரசியல் யாப்பு பூர்வமாக இப்போதுள்ள மாகாண எல்லைகள் மாற்றியமைக்கபடாமல் இருப்பது அவசியம்.

மேலும், பிரதேச செயலக நிலப்பரப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் அனுமதியில்லாமல் மாற்றியமைக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

அத்துடன் அரச காணிகளை வழங்குவது தொடர்பாக அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தில் மாகாண ஆட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறையில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

இதற்கான கோரிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மற்றும் ஜனாதிபதி மற்றும் பிரமருடனான பேச்சுகள் மூலமும் வலியுறுத்தி அரசு சட்டபூர்வமாக இவற்றை நடைமுறைப்படுத்துவதைத் தமிழர் தரப்பு உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு தமிழர் தரப்பிலுள்ள அனைத்து பிரதானமான அரசியற் சக்திகளும், அமைப்பு ரீதியான சமூக சக்திகளும் இணைந்து காத்திரமாகச் செயற்படுவது காலத்தின் அவசியமாகும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இதேவேளை, ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும், அத்துடன் அரச நிர்வாக மற்றும் அரச படைகளின் அதிகாரிகளும் தமிழர்களின் பிரதேசங்களை சிங்கள மயமாக்க முயற்சிப்பது இந்த நாட்டில் அரசியல் அமைதியை நிலைநாட்டாது. அது தேசிய நல் லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை ஆகியவற்றிற்கு எதிரானது என்பதை உணர்ந்து போரினால் வலிகளை சுமந்து நிற்கும் தமிழ் மக்களுக்கு அரசின் மீதும் நாட்டின் சட்டங்களின் மீதும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் – என்றுள்ளது.(ஐ)

# யுத்தத்தில் கையை இழந்த நிலையிலும் சாதித்த மாணவிக்குக் குவியும் பாராட்டு

இலங்கையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் இணையத்தளத்தில் வெளியாகின. இந்தப் பரீட்சையில் மாவட்டத்தில் முன்னிலை பெற்ற, சித்தியடைந்த மாணவிகளுக்குச் சமூக வலைத் தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்துவருகின்றன.

இந்நிலையில் யுத்த பூமியில் இருந்து அங்கம் இழந்தாலும் மனவுறுதி தளராமல் தரம் 5 புலமைபரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளார் முல்லைத்தீவு, முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவி ஞானசீலன் ராகினி. இவர் 169 புள்ளிகள் பெற்று சித்தியடைந் துள்ளார்.



தற்போது ராகினிக்கு சமூகவலைத்தளங்களில் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துப் பாராட்டி வருகின்றனர்.

## நாளை

08.10.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பிப 2.09 வரை
திதி:சதுர்த்தசி மு.ப. 11.16 மணி வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02 வரை

# மனைவிக்காக இதயகாவியம் படைத்த மூத்த எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம்

## கிழக்கிலங்கை மூதூரில் இழப்புகளையே சந்தித்து இறுதிவரை போராடி வாழ்ந்த இலக்கியவாதி

**காலமும் 12 கணங்களும்**

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -

வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் அடிக்கடி நான் செய்திகளில் எழுதும் ஊரின் பெயர் மூதூர். ஒரு காலத்தில் இரட்டை அங்கத்தவர் தொகுதி. தமிழர்களும் முஸ்லிம்களும் புட்டும் தேங்காய் துருவலும் போன்று ஒற்றுமையாக வாழ்ந்த பிரதேசம்.

அரசியல் இந்தத் தொகுதியை சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது. தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அப்பாவி பொது மக்களும் அதிக அளவில் கொல்லப்பட்டிருக்கின்றனர். பல தமிழ்க் கிராமங்கள் இந்த ஊரை அண்மித்திருக்கின்றன. மூதூருக்கு படகில் செல்ல வேண்டும் என்றெல்லாம் சிலர் சொல்லக்கேட்டுள்ளேன்.

ஆனால், நான் இலங்கையிலிருந்த காலப்பகுதியில் திருகோணமலைக்கோ அதன் அயல் ஊர்களுக்கோ சென்றதில்லை. அதற்கான சந்தர்ப்பங்களும் கிடைக்கவில்லை. 1965இல் பாடசாலை சுற்றுலாவிலும் 1978 இல் சூறாவளியின் பொழுதும் தான் மட்டக்களப்பை தரிசித்தேன். இலங்கையில் பார்க்கத்தவறிய தமிழ் ஊர்களும் தமிழ்க்கிராமங்களும் ஏராளம். மன்னார், திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, மூதூர் என்பனவும் முன்னர் எனது தரிசனத்துக்கு கிட்டவில்லை. 1984 இல் தமிழ்நாட்டுக்கு இராமேஸ்வரம் வழியாக சென்றவேளையிலும் மன்னார், தலைமன்னார் ரயில் நிலையங்களைத்தான் கடந்திருக்கின்றேனே தவிர அந்தப் பிரதேசங்களுக்குள் சென்று உலாத்திவிட்டு வருவதற்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

எனினும் – குறிப்பிட்ட தமிழ்ப்பிரதே சங்களை பார்க்கத்தவறிய ஏக்கம் மனதில் நீண்டகாலம் இருந்தது. அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து வந்தது 1987 ஆம் ஆண்டு. 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னரே 2010 இல் மேற்சொன்ன தமிழ் ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் பயணித்து வருவதற்கான வாய்ப்பு கிட்டியது.


அமரர் வ.அ.இராசரத்தினம்

மூதூரில் சம்பூர் , கிளிவெட்டி, கட்டைப் பறிச்சான், பச்சநூர் முதலான பிரதேசங்களில் அடிக்கடி தாக்குதல் சம்பவங்களும் குண்டுவெடிப்புகளும் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் களும் தேடுதல் வேட்டைகளும் நடக்கும். குறிப்பிட்ட செய்திகளை திருகோணமலை மாவட்ட நிருபர் இரத்தினலிங்கம் தினமும் தொலைபேசி ஊடாகச்சொல்வார். மட்டக்களப்பில் நித்தியானந்தன், திருகோணமலையில் இரத்தினலிங்கம், வவுனியாவில் மாணிக்கவாசகர், யாழ்ப்பாணத்தில் காசி. நவரத்தினம் மற்றும் அரசரத்தினம் ஆகியோர் தினமும் என்னுடன் தொலைபேசி தொடர்பிலிருந்து அடிக்கடி பேசுவார்கள்.

1983 இற்குப்பின்னர் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் உள்நாட்டுப்போரினால் மிகவும்மோசமாகப்பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்.

## ஆசிரியராய், படைப்பாளியாய், அச்சுக் கோப்பாளராய் வாழ்ந்த ஆளுமையின் வாழ்வில்தான் எத்தனை இழப்புகள்....?

மூதூரில் கொட்டியாபுரப்பற்று பற்றி நான் படைப்பு இலக்கியத்தில்தான் படித்தேன். அதுவும் வ.அ.இராசரத்தினம் என்ற ஆசிரியரின் சிறுகதைகள் ஊடாகவே அந்த மண்ணின் வாசனையை நுகர்ந்தேன்.

அக்கால கட்டத்தில் இராசரத்தினம் பாலை என்ற சிறுகதையை ஒரு சிற்றிதழில் எழுதியிருந்தார். என்னை மிகவும் கவர்ந்த கதை. அந்தக்கிராமத்தின் ஆத்மாவே சித்திரிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் வ.அ. இராசரத்தினத்தின் தோணி என்ற சிறுகதைத் தொகுதியை (அரசு வெளியீடு) படித்திருக்கின்றேன். அதில் குறிப்பிட்ட தோணி என்ற தலைப்புக் கதையை மாக்ஸிம் கோர்க்கியின் சந்திப்பு என்ற சிறுகதையுடன் சில எழுத்தாளர்கள் ஒப்பிட்டுப்பேசினார்கள்.

அதனால் சந்திப்பு சிறுகதையையும் தேடி எடுத்து வாசித்தேன். யார்... யார்... எங்கேயிருந்து கதைகளை தழுவினார்கள் என்று பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்து கருத்துக்களை சொல்லும் பலரும் அதே வேலையாக இருந்தனர். அவர்களில் சிலர் எழுத்தாளர்கள். புதுமைப்பித்தனின் சில கதைகளையும், டொமினிக்ஜீவாவின் பாதுகை சிறுகதையையும் மாத்திரம் அல்ல எனது அந்தப்பிறவிகள் கதை (பூரணியில் 1972 இல் வெளியானது) பற்றியும் எதிர்வினைகள் எழுதினார்கள்.

இன்று இந்நிலை இல்லை! காரணம் இன்றைய வாசகர்கள் அன்றுபோல் வாசிப்பது குறைவு. எழுத்தாளர்கள் கூட சக எழுத்தாளர்களின் படைப்புகளை வாசித்து கருத்துச் சொல்லும் மனப்பான்மை குறைந்துவிட்டது.

குறிப்பிட்ட தோணி சிறுகதையை தான் படித்த மிகச் சிறந்த கதையென்று நயந்து விரிவான கட்டுரையே எழுதியிருக்கும் தமிழக எழுத்தாளர் பாவண்ணன், அதில் எம்மவர்களின் வாழ்வையும் எழுதி, எக்காலத்திற்கும் பொருத்தமான காலத்தையும் வென்று வாழும் கதையென்று சொல்லியிருக்கிறார். பாவண்ணனின் இந்தக்குறிப்புகளைப் பாருங்கள் : –

கதையில் இடம்பெறும் ‘தோணி வாங்குவது ‘என்னும் கனவை ஓர் குறியீடாக எடுத்துக்கொள்ளாலாம். ஒரு தையல் தொழி லாளி தனக்கென்று ஒரு தையல் எந்திரத்தை வாங்க நினைப்பது, வாடகைக்கு ஓட்டோ ஓட்டுபவன் சொந்தமாக ஓர் ஓட்டோ வாங்க நினைப்பது என இதன் பொருளை விரிவாக் கியபடியே செல்லலாம். தன் நிலையைச் சற்றே உயர்த்திக்கொள்வது என்பதுதான் இதன் பொருள். இருக்கும் நிலையிலிருந்து ஒரே ஓர் அங்குலமாவது உயர்ந்து வாழும் ஆவல். ஆனால், எதார்த்தத்தில் பாதிக்கும் மேற்பட்டவருக்கு இந்த ஆவல் நிறைவேறு வதே இல்லை. எல்லாருக்கும் சாண் ஏறினால் முழம் சறுக்கும் வாழ்க்கைதான்.

உழைக்க ஆவலிருப்பவர்களுக்குப் போதிய வழிகளில்லை. ஓரளவு வழியிருந்து உழைப் பவர்களுக்கு உயர்வதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவு. இன்றைய திகதியில் ஒரு குமாஸ்தாவாக ஓர் அலுவலகத்தில் காலெடுத்து வைப்பவன் முப்பதாண்டுகள் கழித்து ஓய்வு பெறும்போது சீனியர் குமாஸ்தாவாக மட்டுமே வெளியேற முடியும். ஒரு தொழிற்சாலையில் ஒரு டர்னராகவோ பிட்டராகவோ அடியெடுத்து வைப்பவன் வெளியேறுகிற வரைக்கும் அது வாகவே இருக்க வேண்டியதுதான். கூலிக்காரர்கள் நிலையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது. மாறிவரும் தொழில் கலாசாரச் சூழலில் எதிர்காலத்தில் இந்நிலை மேலும் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புகளே அதிகமாகத் தோன்றுகின்றனவே தவிர வெளிச்சமூட்டும் நம்பிக்கை ரேகைகள் குறைவாகவே காணப்படுகின்றன. காலம் மாறினாலும் சூழல் மாறினாலும் ‘தோணி ‘ சிறுகதை இன்னும் நமக்குப் பொருந்திவரக் கூடியதாகவே இருக்கிறது.

சமகால எழுத்தாளர்கள், வாசகர்கள் குறிப்பிட்ட தோணி கதையை தேடி எடுத்து வாசிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கின்றேன்.

இராசரத்தினம் 1925 ஆம் ஆண்டு மூதூரில் பிறந்தார்.

மூதூர், கட்டைப்பறிச்சான், சம்பூர், கிளிவெட்டி முதலான ஊர்களும் நீடித்த போரில் பெரிதும் பாதிக்கப்பட்டன என்று இந்தப் பத்தியில் முதலிலேயே சொல்லிவிட்டேன். அங்கு நிகழ்ந்த தாக்குதல்களினால் இராசரத்தினம் அவர்களின் சேகரிப்பிலிருந்த பெறுமதியான நூல்களும் தீக்கிரையாகின. வீடிழந்து, இடம்பெயர்ந்து.... இடம்பெயர்ந்து... வாழ்ந்தார். அவரது வீட்டிலிருந்த அச்சுக்கூடமும் அழிந்தது. முதலில் மனைவியையும் இழந் தார். ஒரு தாக்குதல் சம்பவத்தில் தனது அருமை மகளையும் மருமகனையும் பறிகொடுத்தார்.





அமரர் வ.அ.இராசரத்தினம்

ஆயுதப்படையினர் தாக்கி அழித்தது மனித உயிர்களை மட்டுமல்ல, வீடுகளை, உடைமைகளை, பெறுமதியான சொத்துக்களை மட்டுமல்ல நூலகங்களையும் பாடசாலைகளையும் தேவாலயங்களையும் மாத்திரமல்ல, நோயாளிகளை எடுத்துச் செல்லும் அம்புலன்ஸ் வண்டிகளையும் தான் தாக்கினர்.

இராசரத்தினத்தின் மகள் நோயுற்று எடுத்துச்செல்லப்பட்ட அம்புலன்ஸும் தாக்கப் பட்டு அவர் கொல்லப்பட்டார். அச்சமயம் அவரது கணவரும் ( இராசரத்தினத்தின் மருமகனும்) கொல்லப்பட்டார். ஒரே நாளில் ஒரே குடும்பத்தில் இரண்டு பேரிழப்பு. இத்தனை அவலங்களையும் சுமந்து கொண்டு வாழ்ந்தவர் தமது 90 வயதுக்கு முன்பே மறைந்தது வியப்பானது அல்ல.

அவர் வாழ்நாள் முழுவதும் ஒரு கனவில் வாழ்ந்தவர். தனது மனைவிக்கு முன்னர் தான் போய்ச் சேர்ந்திடவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர். தனக்கு ஊணும் உபசரிப்பும் தந்து பாசமும் பொழிந்த அவரது மனைவி அத்துடன் நிற்கவில்லை. இராசரத்தினத்தின் இலக்கியப் பணிகளை தொடர்ச்சியாக நினைவில் வைத்திருந்தவர். அவரது படைப்புகள் பத்திரிகைகள் –இதழ்களில் வெளியானதும் அவற்றின் நறுக்குகளையெல்லாம் சேகரித்து பாதுகாத்தவர்.

ஓர் அந்தரங்க செயலாளராகவே திருமதி மேரி லில்லி திரேசா இராசரத்தினம் விளங்கினார். அவரையும் – தனக்காக அவர் சேகரித்து பாதுகாத்த இலக்கிய உடைமைகளையும் பறிகொடுத்து நிர்க்கதியானவர் இராசரத்தினம். அந்தச் சோகத்தை பின்னாளில் பின்வருமாறு எழுதுகின்றார்.

கற்பவைகளையெல்லாம் கற்ற பின்னர் நினைவில் மீந்திருப்பதே கல்வி என்றானாம் ஒரு கல்வியியல் விற்பன்னன். என் இலக்கியப்பயணத்திலும் மீதியாக நினைவில் நிற்பவையே நிலைக்கட்டும் என்ற எண்ணம் மீதூர நினைவில் நின்றவற்றையே எழுதினேன். சில இதழ்களின் பெயர்கள் நினைவுக்கு வரவில்லை. சிலரது பெயர்களும் நினைவுக்கு வரவில்லை. யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால், அதைச்செய்ய விரும்பவில்லை. என் நினைவுகளை நினைத்து நினைத்து எழுதினேன்.

அதனால் இந்நினைவுகளில் வரும் ஆண்டுகள் சற்று முன்பின்னராக இருக்கலாம். ஆனால், நினைவுகளில் சத்தியம் இருக்கிறது. இத்தருணத்தில் காலஞ்சென்ற என் மனைவியை நினைக்கின்றேன். செம்மீனை எழுதிய தகழி சிவசங்கரன் பிள்ளையிடம், இத்தனை பேரும் புகழும் பெற்றுவிட்டீர்களே... இன்னமும் உங்களது ஆசை என்ன...? என்று கேட்டாராம் ஓர் இலக்கிய அன்பர். வலது கையிற் கள்ளுக்கோப்பையை பிடித்தபடி இடது கைவிரல்களினாற் தன் தலைச்சிகையைப்பின்னுக்கு கோதியபடியே தகழி அமைதியாகச்சொன்னாராம் என்ர கறுத்தம்மை மரிக்கு முதல் ஞான் மரிக்கணும் (தகழியின் செம்மீன் நாவலின் கதா நாயகியின் பெயரும் கறுத்தம்மை)




(15 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kālaikkathir



# உலகெங்கும் சோதிப்பிழம்பாக தெய்வீகக் காட்சி கொடுக்கும்

# அழகன் முருகனின் ஆலயங்கள் அநேகம்!

# அவன்தாள் பணிந்து வணங்குவோம்!!

மகாதேவஜயர் ஜெயராமசர்மா
முன்னாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் அவுஸ்திரேலியா



கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனைமறவேனே , கந்தன் திருநீறணிந்தால் கண்ட பிணி ஓடிவிடும் என்று முருகன் அடியார்கள் தினமும் எண்ணி எண்ணியேமுருகனைமனதாரவழிபட்டு வருகிறார்கள். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமென்று அடியார்கள் கொண்டாடிபோற்றுகின்றார்கள். வேலை வணங்குவதே வேலை என்பதுதான் முருகன் அடியார்களின் மனக்கிடைக்கையாக இருக்கிறது என லாம். கலியுகத்தில்கண்கண்ட தெய்வமாக முருகனே விளங்குகிறார் என்று முருகன் அடியார்கள் பலரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். வைதாரையும் வாழவைப்பான் முருகன் என்பது அவர்களது உறுதியான எண்ணமாகவும் இருக்கிறது.

இந்தியாவில் பல இடங்களிலும் முருகனுக்கு அடியார்கள் ஆலயங்களை அமைத்திருக்கிறார்கள். வடக்கிலும் தெற்கிலும் பல ஆலயங்கள் முருகனுக்கு என்றே இருக்கின்றன. அறுபடைவீடு என்னும்வகையில் – திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை, மிகவும் சிறப்பான ஆலயங்களாக யாவராலும் போற்றப்பட்டு வருகின்றன.

இவற்றைவிடச் சென்னையில் பல இடங்களில் முருகன் கோவில்கள் அடியார்களினால் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. சென்னையிலும் அறுபடை வீடும், வடபழனி முருகன் கோவிலும் பிரசித்தமாக இருக்கின்றன.

வேலூர்பகுதியில்; இரத்தினகிரியில் தனிப்பட்ட ஓர் அடியவரின் தளராத முயற்சியினால் குன்றினிலே இரத்தினகிரி முருகன் ஆலயம் கம்பீரமாக அருளாட்சியினை வழங்கிக் கொண்டிருக்கிறது.

முருகனது அடியார்கள் மொழியினைக் கடந்து நாடுகளைக் கடந்து உலகெங்கும் பரந்து காணப்படு கிறார்கள். சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஸ் தென்னாபிரிக்கா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, லண்டன், ஆஸ்திரேலியா, ஆகிய நாடுகளிலும், ஈழத்திருநாட்டினிலும், காணப்படுகிறார்கள். மொழி வேறுபட்டாலும் கலாசாரம் வேறுபட்டாலும், கொள்கைகள் வேறுபட்டாலும், அரசியலால் வேறுபட்டாலும், அவர்கள்யாவரும் முருகனது அடியார்கள் என்ற வகையில் ஒத்த மனத்தினராய்முருகன்மீது அபார பக்தி உடையவர்களாகவே காணப்படுகி றார்கள் என்பதுதான் முக்கியமாகும்.

### கௌமாரம் என்ற சமயம்

முருக ஆலயங்கள் முருக அடியார்கள் பற்றிச் சிந்திக்கும்பொழுது முருகனைப்பற்றியும்முருகனது சமயவரலாறு பற்றியும் அறிவதும் அவசியமாகும். முருகனது நிலைபற்றி உரைப்பது கௌமாரமாகும். இந்துசமயத்துள் இது அடங்கினாலும் இது முருகன் பற்றியே சொல்லுகிறது என்பதே முக்கியமாகும். கௌமாரம் என்பது ஒரு சமயமாகும். இச்சமயத்துக்கு உரிய தெய்வமாக முருகனே விளங்குகின்றார். முருகனைக் குமாரன் என்றும் அழைப்பர். குமாரன் என்றால் அஞ்ஞானத்தை ஒழிப்பவர் என்பது கருத்தாகும்.குமாரன் அறு வகைச் சமயங்களையும் இணைத்தே நிற்கிறார். அவரின் திருமுகங்கள் ஆறாகும்.

அவரே முழுமுதற் பொருள் என்கிறது கௌமாரம்.

அறு சமய சாத்திரப்பொருளே என்று அருணகிரிசுவாமிகள் திருப்புகழில் காட்டுவது நோக்கத்தக்கது.

**“அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவா யொன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக் கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய”** – என்று முருகனது தோற்றம் காட்டப்படுகிறது கந்தபுராணத்தில்.உலகைப் படைக்கும் பிரம்மாவாய்,உலகைக் காக்கும் விஷ் ணுவாய், உலகினை அழிக்கும் உருத் திரனாய், கோலமாய், காலமாய், குணமாய், ஞாலமாய், அனாதியாய் அமைந்த சோதிப்பிழம்புதான் முருகன் என்பது அவரது அடியார்களின் அசையாத நம்பிக்கை எனலாம்.

முருகனைப் பற்றி வடமொழிநூல்களும் சொல்லுகின்றன. தமிழ் மொழி நூல்களும் சொல்லுகின்றன. வேதங்களிலுல் சுப்ரமண்யோம் என்று வருகிறது. வேதகாலத்தில் முனிவர்கள் தங்களின் யாகங்களை நிறைவு செய்யும்வேளை சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம்என்று மூன்றுமுறை கூறினர் என 'தைத்திரீயாரண்யகம் ' சுட்டுகிறது.

### குமாரதந்திரம்

காளிதாசரின் குமாரசம்பவம் முருகனைப் பற்றிக் கூறும் காவியமாகும்.இது வடமொழியிலே அமைந்திருக்கிறது.. பாணினியும் முருகனை காங்கேயன், குகன், சண்முகன், விசாகன், கார்த்திகேயன் என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

சிவ ஆகமங்களான காமிகம், காரணம், சுப்பிரபேதம், யாவும் முருகனது வரலாறு பற்றிக் குறிப்புகளைக் கூறி நிற்கின்றன. குமாரதந்திரம் என்பது முருகப் பெருமானது வரலாற்றையும் முருகனது விழாக்கள், பூஜைகள், விரதம், பிரதிஷ்டைசெய்யும் விதம் இவற்றையெல்லாம் விரிவாய் எடுத்து விளக்கி நிற்கிறது எனலாம்.

இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம், இவையும் முருகனைப் பற்றிச் சொல்லி நிற்கின்றன.தமிழ் இலக்கியக்கியங்களும் முருகனைப்பற்றி சொல்லுகின்றன என்பதும் முக்கியமாகும். தொல்காப்பியத்தில் சொல்லப்படுவது மிகவும் முக்கியம்எனக்கருதலாம்,சேயோன் மேய மைவர உலகம் இவ்வாறு தொல்காப்பியம் செப்புகிறது. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பரிபாடல்,திரு முருகாற்றுப்படை, மூலகமாகவும் முருகனைப் பற்றிய செய்திகளை அறிய முடிவதனால் முருக வணக்கமும் முருகனது அடியார்களும் பன்னெடுங் காலமாக இருந்து வருகிறார்கள் என்பதைஅறிகிறோம்அல்லவா!



திருமுருகாற்றுப்படை என்பது முருகன் அடியார்களை முருகன் அருள்பெற ஆற்றுப்படுத்தும் நூலாகவே அமைகிறது. முருகனது அறுபடை வீடுகள் அதாவது முருகன் அருளாட்சி புரிய எழுந்தருளியிருக்கும் இடங்களின் பெருமைகளைப் விவரிப்பதாகவும் இருக்கிறது. அப்படிஎன்றால் இதனைப்பாடிய நக்கீரர் என்னும் அடியார் அப்பொழுதே முருகன் ஆலயங்கள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டாரோ என்றேதான்எண்ணத் தோன்றுகிறதல்லவா ?

ஆதிக்க நல்லூர் என்னும் இடத்தில் நடந்த தொல்பொருள் ஆய்வின்படி, கி.மு ஆயிரத்து இருநூறு ஆண்டளவில் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

பல்லவமன்னர்காலமும், சோழப்பெருமன்னர் காலமும் முருக வழிபாட்டைப் பொறுத்தவரைதமிழ் நட்டிலே இருண்ட காலமாய்த்தான் கொள்ளமுடிகிறது. பக்திப்பாடல்கள் பல பெருக்கெடுத்த பல்லவர்காலத்திலே முருகனுக்குச் சிவன் தந்தை என்னும் குறிப்பு மிகச் சில தேவாரங்களில்மட்டுமே காணப்படுகிறது.

### முருக வழிபாட்டில் ஒரு மறுமலர்ச்சி

திருச்செந்தூர் கல்வெட்டு மூலமாக வேதான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இரண்டாம் வரகுணபாண்டியன் திருச்செந்தூர் முருகன் பூஜைக்குப் பெருந்தொகை பணம் உதவினான் என அறியமுடிகிறது. முருகவழிபாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதென்றால் அதனை கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டென்றே எடுத்துக் கொள்ளலாம்.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதி அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கமே அருணகிரிநாதர் காலமாகும். மூவேந்தர்களும் தமிழ்நாட்டை ஆண்டவேளை முருகவழிபாடு ஓங்கவில்லை. அவர்களின் பின்னர்தான் ஓங்கியது ஏன் என்பதை வரலாற்று சமய ஆய்வாளர்கள்தான் ஆராய்தல் வேண்டும்.

### அருணகிரியாரால் செழித்தோங்கிய முருகவழிபாடு

அருணகிரியாரால் முருகவழிபாடு செழித்தோங்கியது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. ஏனையகடவுள்களையும் அவர் போற்றிப் பாடிய பொழுதும் – முருகன்மீது அவரது தனிவிருப்பம் பல்லாயிரம் திருப்புகழாகஎமக்குக் கிடைத்திருக்கிறது. முருகன்மீது பல பிரபந்தங்களையும் பாடி அளித்துள்ளார். கந்தரலங்காரம், கந்தரனுபூதி அருணகிரியாரின் தத்துவமுத்துக்களாய்திகழ்கின்றன.ஈழத்து முருகன் தலங்களையும் அருணகிரியார் பாடியுள்ளார். முருகனது அடியவராயிருந்து முருகவழிபாடு சிறக்கபெருந் தொண்டாற்றினார் அருணகிரியார் என்பது முருகனது அடியவர்க்கெல்லாம் சிறந்ததொரு முன்மாதிரி எனலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)







# பொருளாதார நீதியாக திட்டவட்டமான கொள்கை இலங்கை அரசிடம் இல்லை!


அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு, மிக கடுமையான அளவு வீழ்ச்சியடைந்திருக்கிறது. இலங்கையின் வரலாற்றில், இதற்கு முன்னர் இந்தளவுக்கு அதன் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்ததில்லை என்று கூறப்படுகிறது.

தற்போதைய அரசாங்கம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09ஆம் திகதி, ஆட்சியமைத்த போது, அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமதி 131 ரூபாய் 25 சதமாக இருந்தது. ஆனால், இன்றைய தினத்தில் (03 ஆம் திகதி) அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 170 ரூபாய் 75 சதமாக உள்ளது.

இதன் காரணமாக, நாட்டில் எரிபொருளுக்கான விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் 117 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோலின் தற்போதைய விலை, 149 ரூபாயாகும். இதன் காரணமாக, உள்நாட்டில் பெரும்பாலான பொருள்களின் விலைகளில் சடுதியான அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாகவே, இலங் கையின் நாணயப் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக, முன்னாள்



ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம்சாட்டியிருக்கின்றார்.

எவ்வாறாயினும் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம் குறைந்த மட்டத்திலேயே உள்ளதாக, நிதி மற்றும் ஊடக அமைச்சகம் கூறியுள்ளது.

மே மாதத்துக்குப் பின்னர் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 06 சதவீதத்தால் குறைந்துள்ள நிலையில், இந்திய பணப் பெறுமதி 11 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்துள்ளதாக மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் எவ்வாறாயினும், இது தற்காலிகமானதொரு பிரச்சினையாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில நாள்களுக்கு முன்னர் கூறியிருந்தமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இலங்கையின் நாணயப் பெறுமதியின் வீழ்ச்சி குறித்து, மேற்கண்டவாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இது தொடர்பான தெளிவினையும், விளக்கத்தினையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, தென்கிழக்கு பல்கலைக் கழகத் தின் நிதியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முனைவர் ஏ.எல். அப்துல் ரவூப் அவர்களை பி.பி.சி தமிழ் சந்தித்துப் பேசியது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்தனதுநாட்டின்நலனை முன்னிறுத்தி எடுத்த சில தீர்மானங்களின் காரணமாகத்தான், டொலருக்கு நிகரான இலங்கையின் நாணயப் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது என, இதன்போது கலாநிதி ரவூப் கூறினார்.

அமெரிக்காவுக்கும் நிதி நெருக்கடி உள்ளது. அதனால், அங்கும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பொருளாதார ரீதியிலான சிந்தனையுள்ளவர். அடிப்படையில் அவர் ஒரு வியாபார பிரமுகராவார். எனவே, அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணம் என்ன என்பதை, அவர் விளங்கிக்கொண்டு, அதனைச் சரி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

சர்வதேச பொருளாதாரம் அமெரிக்க டொலருடன் பின்னிப்பிணைந்துள்ளதால், உள்நாட்டில் ட்ரம்ப் மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள், ஏனைய பலநாடுகளுக்கு மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

### அமெரிக்காவில் முதலீடு செய்வதில் ஆர்வம்

உதாரணமாக, அமெரிக்காவின் மத்திய வங்கியானது திடீரென தனது வட்டி வீதத்தினை அண்மையில் அதிகரித்தது. இதனால், பிற நாடுகளில் டொலரில் முதலீடு செய்திருந்தோர், அவற்றை மீளப்பெற்று, அமெரிக்காவில் முதலீடு செய்யத் தொடங்கினார்கள். இலங்கையில் முதலீடு செய்தவர்களும் இவ்வாறு, அமெரிக்காவை நோக்கிச் சென்றனர். இலங்கையின் நாணயப் பெறுமதி வீழ்வதற்கு இதுதான் பிரதான காரணமாகும்.என, பி.பி.சி தமிழிடம் கலாநிதி ரவூப் தெரிவித்தார்.

மேலும், வெளிநாட்டுப் பொருள்களுக்கான இறக்குமதி வரியையும் அமெரிக்கா அதிகரித்துள்ளது. குறிப்பாக, சீனப் பொருள்களுக்கு, அதிக வரியை விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் சீனாதான் அமெரிக்காவுக்கு சவாலாக உள்ளது. அதனால்தான் சீனப் பொருள்களுக்கான இறக்குமதி வரியைஅமெரிக்கா அதிகரித்துள்ளது. இலங்கையின் நாணய மதிப்பிறக்கத்துக்கு இந்த நடவடிக்கையும் ஒரு காரணமாகும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் இவ்வாறான நடவடிக்கைகளால் இலங்கை நாணயத்தில் ஏற்பட்டுள்ள மதிப்பிறக்கத்தை, இலங்கை அரசாங்கத்தின் ஸ்திரமற்ற தன்மை, இங்கு நிலவும் மோசமான காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்றவை மேலும் தீவிரமடையச் செய்துள்ளன.

இருந்தபோதும், இவ்வாறான நிலையைத் தடுப்பதற்குரிய சிறந்த உபாயங்கள் இலங்கையிடம் இல்லை. இன்னொரு



புறமாக, இலங்கைக்கு வருமானம் பெற்றுத் தரக்கூடிய பெரும்பாலான துறைகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளன. மேலும், வெளிநாடுகளிடம் இலங்கை பெற்றுள்ள கடன்களையும், அதற்கான வட்டியையும் டொலரில்தான் மீளச் செலுத்த வேண்டியுள்ளது. இவையும் நாணய மதிப்பிறக்கத்தின் சுமையை இலங்கைக்கு அதிகரித்துள்ளது எனவும், அவர் விவரித்தார்.

இந்த நிலைவரத்திலிருந்து தப்பிக்க வேண்டுமானால், இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதோடு, ஏற்றுமதி பொருள்களின் அளவினையும் உயர்த்த வேண்டும். மேலும், இலங்கைக்குள் டொலரைக் கொண்டுவந்து செலவு செய்வதற்கான வழி வகைகளும் உருவாக்கப்பட வேண்டும். அதன்பொருட்டு இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகையை அதிகரிக்க முடியும். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலமாக இதனைச் சாதிக்கலாம்.

### வருமானத்தில் வீழ்ச்சி

வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மூலம், முன்னர் இலங்கைக்கு கிடைத்து வந்த வருமானத்தில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் மத்திய கிழக்கு நாடுகளில் கொண்டுவரப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும், இலங்கையிலிருந்து பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை நாடிச் செல்வதில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் இதற்கான முக்கிய காரணங்களாகும். இவை போன்ற பல்வேறு காரணங்களால், இலங்கையின் நாணயப் பெறுமதியின் வீழ்ச்சியை தடுக்க முடியாமல் உள்ளது.

வெளிநாட்டுப் பொருள்களை இலங்கையர்கள் அதிகமாக கொள்வனவு செய்கின்றனர். அதேவேளை, இலங்கைப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு குறைந்த மட்டத்திலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த நிலைவரம் நாணயப் பெறுமதியின் வீழ்ச்சியை மேலும் அதிகப்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

1997ஆம் ஆண்டு மலேசியாவை இலங்கு வைத்து அமெரிக்கா மேற்கொண்ட பொருளாதார நெருக்கடியை, இதன்போது கலாநிதி ரவூப் நினைவுபடுத்தினார். அப்போது மலேசியாவின் பிரதமராக டாக்டர்

## வரலாறு காணாத இன்றைய நாணய மதிப்பிறக்கத்துக்கு அதுவே காரணம்!

மகாதீர் மொஹமத் பதவி வகித்தார். மலேசியாவின் பொருளாதாரம் அப்போது வீறுநடை கொண்டு, முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. இதனைக் கண்டு மேற்குலகம் அச்சமடைந்தது. இதன் காரணமாக, முன்னறிவித்தல் எவையுமின்றி, மலேசியாவில் அமெரிக்கா செய்திருந்த அனைத்து முதலீடுகளையும், அந்த நாடு மீளப் பெற்றுக் கொண்டது.

### மலேசியாவில்...

இதனால், மலேசியா பெரும் நெருக்கடிக்குள்ளானது. இந்த நிலையில், மகாதீர் மொஹமத் தீர்மானமொன்றை மேற்கொண்டார். தனது நாட்டு மக்களிடம் சத்திய வாக்கொன்றை அவர் கேட்டார். 'எமது சொந்தக் காலில் நிற்பதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா? அவ்வாறெனில், ஆறு வருடங்களுக்கு நீங்கள் தியாகம் ஒன்றைச் செய்ய வேண்டும். அது என்னவென்றால், வெளிநாட்டுப் பொருள்களில் நீங்கள் மோகம் கொள்ளக் கூடாது. உள்நாட்டுப் பொருள்களையே நீங்கள் நுகர வேண்டும்' என்பதே அந்த சத்திய வாக்காகும்.

டாக்டர் மஹாதீருக்கு மக்கள் வாக்குறுதியளித்தனர். அப்போது, பொருளாதார ரீதியில் இலங்கையை விடவும் பின்தங்கிய நிலையில்தான் மலேசியா இருந்தது. ஆனால், அந்த நாட்டு மக்கள் உள்நாட்டு உற்பத்தியில் காட்டிய அதீத அக்கறையும், வெளிநாட்டு பொருள்களை கொள்வனவு செய்வதில் விலகி நின்றமையும். தற்போது அவர்களை உலகளவில் உயரச் செய்துள்ளது. இப்போது, மலேசியப் பொருள்களை வெளிநாடுகள் அதிகளவில் கொள்வனவு செய்யும் நிலைவரத்தை அந்த மக்கள் உருவாக்கினர்.

அதே காலப்பகுதியில் கல்வித் துறையினையும் மகாதீர் மொஹமத் வளர்த்தெடுத்தார். அதற்காக, நாட்டில் பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். மேலும், உள்நாட்டில் சிறப்பான முறையில் பட்டங்களைப் பெற்றவர்கள், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு மேற்படிப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு மேற்படிப்பை முடித்துக் கொண்டவர்கள் மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு, கல்வித்துறை வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டார்கள்.

இதன் காரணமாக, இப்போது கல்வித்துறையிலும் உலகளவில் மலேசியா முன்னேறியுள்ளது. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு மேற்படிப்புக்காகச் செல்வதைப் போன்று, வெளிநாடுகளிலிருந்து மேற்படிப்பை மேற்கொள்வதற்காக இப்போது மலேசியாவுக்கும் மாணவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் என்று, மலேசியாவின் மீளெழுச்சி பற்றி, கலாநிதி ரவூப் விளக்கமளித்தார்.

### இலங்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும்

எனவே, இலங்கையின் பொருளாதாரத்தில் கொள்கை ரீதியிலானதொரு மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, மக்களும் கொள்கை ரீதியாக மாற வேண்டும். ஆனால், கட்டுப்பாடு ரீதியாக அரசாங்கம் கொள்கைகளை அமுலாக்கக் கூடாது. உள்நாட்டுப் பொருள்களை கொள்வனவு செய்யுமாறு மக்களை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

இந்த இடத்தில் வெட்கப்பட வேண்டிதொரு விடயத்தையும் சொல்ல வேண்டியுள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நாட்டில் இருந்து கொண்டு, நாம் டின் மீன்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றோம். அண்மையில் நாட்டுக்குள்



கொண்டுவரப்பட்ட டின் மீன்கள் பழுதடைந்திருந்தன என்றும், அதனை திருப்பியனுப்ப வேண்டும் என்றும், அரசாங்கம் கூறிக் கொண்டிருந்தது. கடல் வளமும், மீன் வளமும் உள்ள நாட்டுக்குள் டின் மீன்களை இறக்குமதி செய்வதே தவறாகும். இலங்கையில் பிடிக்கப்படும் மீன்களை டின்களில் நாமே அடைக்க முடியும். ஆனால், அதனை இதுவரை செய்யாமல், எமது மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

அங்கு அந்த மீன்களை டின்களில் அடைக்கிறார்கள். அவற்றை நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இப்படியிருந்தால், எப்படி நாம் உள்நாட்டு உற்பத்தியில் முன்னேறுவது? என்கிற கேள்வியையும் கலாநிதி ரவூப் முன்வைத்தார்.



பொருளாதார ரீதியாக இலங்கையிடம் திட்டவட்டமானதொரு கொள்கை இல்லை. ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வரும் போது, தத்தமது அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கிணங்க, பொருளாதார துறையைக் கையாள்கின்றன. இலங்கையின் நாணய மதிப்பிறக்கத்தை எதிர்கொள்ள முடியாமல் போயுள்ளமைக்கு, இதுவும் மிக முக்கிய காரணமாகும் என்றும் கலாநிதி ரவூப் கூறினார். *

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**07.10.2018 - 13.10.2018**

சந்திராஷ்டம நாள் - உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

*2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை. திரயோதசித்திதி காலை 2.02 மணி வரை பின்னர் சதுர்த்ததி நட்சத்திரம் பூரம் பகல் 3.18 மணி வரை. பின்னர் உத்தரம். சித்தமிர்த யோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *மாலை 4.27 மணி முதல் 5.56 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 9.02 மணி முதல் 10.33 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *புரட்டாதி மாத தேய்பிறை திரயோதசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - *பூரம்.*



## மேஷம்:

உயர்வானவாரம்.பணவரவு திருப்தியைத்தரும். காரியத் தடைகள் நீங்கும். முயற்சிக்குஎன்றும்உறுதுணையாக உற்ற நண்பர்கள் உதவிசெய்வார்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவார்கள். குடும்பத்தில் அமைதியும் மகிழ்சியும் நிறைந்திருக்கும் வெளிவட்டாரப் பழக்கங்கள் நன்மையைத் தரும். புத்திரர்களால் ஆதாயமும் பெண்களால் பணமும் வரும். அமைதியான வாழ்வும் சிரமம் குறைந்து வெற்றியும் பெறுவார்கள். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். பொறுமையுடன் நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக இருத்தால் ஏற்றமான சூழ்நிலையாகும்.



## ரிஷபம்:

சலனம் மிகுந்த வாரம் பணவரவு குறையும் உடலில் ரோகங்கள் உண்டாகும் குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும் நினைக்கும் காரியங்கள் கைகூடாமற்போகும். எடுத்த முயற்சிகளில் தடையும் வீண்அலைச்சலும் உண்டாகும். தொழிலில் சில பாதிப்புகளுக்கு ஆளாக வேண்டிவரும். பணியின் போது கவனமாகச் செயற்படவேண்டும். அதிகமான காரியங்கள் மனதை வாட்டும். உறவினர்கள் நண்பா்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும் இருப்பிடவசதிகள் குறையும்.



## மிதுனம்:

மத்திம பலன்கள் உள்ள வாரம். பணவரவு சுமாராக இருக்கும் செலவினங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். தொழில் போட்டிக்கு ஈடு கொடுக்கும் வகையில் பல்வேறு யோசனைகளில் தூக்கமில்லாமல் அவதிப்பட நேரும். வியாபரத்தில் மத்திமலாபம் கிடைக்கும் ஊழியர்களால் பணியில் பிரச்சினை ஏற்படும் என்பதால் ஊழியர்களைக் கண்காணிக்க வேண்டும் புதிய தொழில் முயற்சியைத்தள்ளி வைப்பது நல்லது. சிலருக்கு பணப் பற்றாக்குறையால் கடன்பட வேண்டிவரும்.



## கடகம்:

நன்மையானவாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத்தரும். நீண்ட நாள் பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரும் மாணவர்களுக்கு கல்வித்தடை நீங்கும். புனித யாத்திரை செல்வார்கள். புத்திரர்களின் ஒத்துழைப்பு உறுதுணையாக அமையும். எதிர் பாராத உத்தியோக மேன்மையும் கிடப்பில் கிடந்த வசியங்களும் வெளிப்படும். பழகிய நண்பர்களின் ஒத்துழைப்பால் எல்லாக்காரியங்களையும் தடையின்றி செய்து வருவார்கள்.



## சிம்மம்:

ஆக்கபூர்வமான வாரம். நீண்ட நாள்கள் வராமல் இருக்கும் பணம் வந்து சேரும். பணியில் வேலைச் சுமை குறையும் பணத்தடை நீங்கும் செல்வாக்குப் பெருகும் எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டும். சிலர் சுற்றத்தாருடன் சேர்ந்து சுபநிகழ்ச்சிகளுக்குச் சென்று உறவுகளை விரிவுபடுத்திக்கொள்வர்கள். குடும்ப உறவு நெருக்கமான உறவாக இருக்கும் . திறமையான விடயங்களை எளிமையாக முடிப்பார்கள். சகோதர உறவுவலுவானதாக இருக்கும்.



## கன்னி:

யோசனையான வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும் குடும்ப பிரச்சினைகளால் கவலை உண்டாகும். வியாபாரம் மந்தகதியில் நடக்கும் தாயாரின் உடல் நிலை பாதிப்படையும் உத்தியோகத்தர்களுக்கு சக பணியாளர்களுடன் கருத்து மோதல்கள் உண்டாகும். பெண்களுக்கு பணப் பற்றாக்குறையால் குடும்பச் செலவுகளைச் சமாளிக்கக் கஷ்டப்படுவார்கள் நண்பர்கள் பகைத்துக்கொள்வார்கள். மாணவர்களின் கல்வியில் குழப்பம் உண்டாகும். பூர்வீகச்சொத்து வழக்குகள் இழுபறிநிலையில் இருக்கும்



## துலாம்:

உயர்வானவாரம். பொருளாதாரம் உயர்வடையும் குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும் அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இவர்கள் விரும்பியபாடியே வாழ்க்கை அமையும். புனித இடங்களுக்குச் சென்று வருவார்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் மேன்மையும் உயர்ந்த மனிதர்களின் நட்பும் கிடைக்கும். பிரிந்த உறவுகள் மனம் விட்டு பேசிவருவது மனதிற்கு சந்தோசத்தைத் தரும். எடுத்த காரியத்தில் வெற்றியும் காரிய அனுகூலமும் கிடைக்கும்.



## விருச்சிகம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும் தாயார் வழியில் புதிய செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல்நலனில் அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களின் உதவி ஓரளவு கிடைக்கும். வாகனங்களுக்கு செலவு வரும் வீட்டுப்பராமரிப்புக்கு கொஞ்சம் செலவு செய்ய வேண்டி வரும். பெண்கள் உற்ற நண்பர்களிடம் நெருங்கிப்பழகினாலும் பண விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.



## தனுசு:

நன்மையான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும் குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வழக்குகள் முடிவுக்கு வரும். சகோதரர்களால் ஆதாயம் கிட்டும்.குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொண்டு சிறப்பாகத் தேர்ச்சி பெறுவார்கள். நீண்ட நாள் தொடர்பில்லாத நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியைத்தரும். எடுத்த காரியத்தை முடிக்கும் வேகம் தென்படும் .அரசாங்க அனுகூலம் கிட்டும். பெண்களின் ஒத்துழைப்பு உதவிகரமாக இருக்கும்.



## மகரம்:

கவலையான வாரம். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் சலசலப்பு இருக்கும் உறவினர்களுடன் வீண்பகைமை உண்டாகும். உடல் நிலைபாதிப்படையும் . வியாபரத்தில் பொருகள் தேங்கிகிடைக்கும். திட்டமிட்ட பயணம் கைகூடாமற்போகும். திருமாணப் பேச்சு வார்த்தைகள் குழம்பி போகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். பெற்றோரைப் பற்றிய கவலை மனதை வாட்டும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள். கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும்.



## கும்பம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும் வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். பணவிடயத்தில் எழுத்துபூர்வமான ஒப்பந்தம் செய்து கொள்வது நல்லது. மற்றவர்களுக்கு பிணையாகச் செல்வதைத் தவிர்க்கவும்.


எடுத்த காரியத்தை முடிக்க விடாமுயற்சி அவசியம். மாணவர்களுக்கு மந்த புத்தியே செயற்படும். நண்பர்கள் பலர் உதவி செய்ய முன் வந்தாலும் அதை எற்க மாட்டார்கள். புதிய முயற்சிகளுக்கு இந்த வாரம் உகந்ததல்ல.



## மீனம்:

இது உயர்வான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். இதுவரை ஏமாற்றம் அளித்து வந்த காரியம் தற்போது கை கூடும்.

நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்துஇவர்களின்மனக்குறையைநிவர்த்தி செய்வார்கள். சிலர் ஆடம்பரப் பொருள்கள் வாங்கி வீட்டை அழகுபடுத்திக் கொள்வார்கள். சகோதரர்களால் ஆதாயம் கிட்டும். குடும்பத்தினருடன் விருந்துக்குச் செல்லும் வாய்ப்பு அமையும். எடுத்த காரியத்தை முடிக்க விடாமுயற்சி அவசியம்.



# குருபெயர்ச்சிப் பலன்கள்

## 04.10.2018 முதல் 28.10.2019 வரை

**விளம்பி வருட குருப்பெயர்ச்சி நேற்றுமுன்தினம் 4 ஆம் திகதி இரவு 10.05 மணிக்கு இடம்பெற்றது. குருபகவான் துலா இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாறுகிறார். பன்னிரண்டு இராசிக்காரர்களுக்குமான பலன்கள் தொடர்ந்து வெளியாகும்.**



## துலாம்

**(சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் உங்கள் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறியுள்ளார்.

**பலன்:**
நியாயத்தை உயிரென நினைக்கும் துலாராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு இரண்டாமிடமாகிய தனம், வாக்கு, குடும்ப ஸ்தானத்திற்கு குருபகவான் பெயர்ச்சியாகிறார். அவர் அங்கிருந்து ஆறாமிடமாகிய ரண, ருண, சத்ரு ஸ்தானத்தையும், எட்டாமிடமாகிய ஆயுள் ஸ்தானத்தையும், பத்தாமிடமாகிய தொழில் ஸ்தானத்தையும் சுபப் பார்வையாக பார்க்கிறார்.

குடும்பத்தை பொறுத்தவரையில் குருபகவான் அங்கு அமர்ந்திருப்பதால் வாக்கில் வன்மையும், பேச்சில் நிதானமும், செல்வாக்கும் அமையப் பெறுவீர்கள். குடும்பம் அமைதியாகவும், நிம்மதியாகவும் இருக்கும். தந்தையாரின் உடல் நலனில் அக்கறை காட்டுங்கள். தந்தை வழி சொத்துகளில் இருந்து வந்த பிரச்சினைகள் மட்டும் சனியின் பார்வையால் அவ்வப்போது வந்து போகும்.

தொழிலைப் பொறுத்தவரையில் குருபகவானின் சுபப் பார்வை தொழில் ஸ்தானத்தின் மீது இருப்பதால் தொழில் இருந்து வந்த தடைகள் அகலும். உங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான லாபத்தை பகவான் வாரி வழங்கி விடுவார். தொழிலுக்குத் தேவையான நிதி உதவிகள் தாராளமாக கிடைக்கும்.

**உத்யோகத்தர்களுக்கும் -**
இந்த குரு பெயர்ச்சி சாதகமாகவே இருக்கும். வேலையில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உடன் பணிபுரிபவர்களுடன் இருந்து வந்த மன வருத்தங்கள் அகலும். உடல் ஆரோக்கிய குறைவால் வேலைக்குச் செல்லாமல் இருந்தவர்கள் இப்போது வேலைக்குச் செல்வார்கள்.

**பெண்களுக்கு -**
சோம்பல் குறையும். உடலில் இருந்து வந்த சில குறைபாடுகளும் அகலும். அதனால் உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். உங்களை அவமதித்தவர்கள் உங்களை புரிந்து கொள்வார்கள். மன்னிப்பும் கேட்பார்கள்.

**மாணவர்களுக்கு -**
கல்வியில் சிறந்து விளங்குவார்கள். நீங்கள் எதிரியாய் நினைத்தவர்கள் கூட உங்களுக்கு நண்பர்கள் ஆவார்கள். கல்விக்காக வாங்கிய கடன் அடையும். உங்களின் கிரகிக்கும் தன்மை அதிகரிக்கும்.

**அரசியல்துறையினருக்கு -**
வீண் அலைச்சல், கோவில் சார்ந்த வியங்களில் பிரச்சினை போன்றவற்றை சந்தித்திருப்பார்கள். அவற்றில் இருந்து விடுதலை கிடைக்கும். விரையங்கள் குறையும். ஆன்மீக வேலைகளில் நாட்டம் அதிகரிக்கும்.

**கலைத்துறையினருக்கு -**
நிறைய ஒப்பந்தங்கள் கைக்கு வந்து தட்டிப்போயிருக்கும். இனி அவ்வாறு இருக்காது. புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அதன் மூலம் ஆர்வத்துடன் செயல்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் அதிகம் இருந்தாலும் அவை அனைத்தும் உங்களின் முன்னேற்றத்திற்காகவே. அதிக உழைப்பை தர வேண்டியிருக்கும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் செய்யும் காரியங்கள் அனைத்திலுமே திருப்தியும், வெற்றியும் காணப்படும். குடும்பத்தில் பிரச்சினைகள் இருந்தால் அனைவருடனும் அமர்ந்து பேசி நல்வழியில் தீர்வு எடுங்கள். அது உங்கள் எதிர்காலத்திற்கு உதவும்.

**சுவாதி:**
இந்த குரு பெயர்ச்சியில் இனம் புரியாத கவலை மனதில் குடி கொண்டிருக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். தாங்கள் இப்போது உள்ள வேலையை மட்டும் கவனித்து வாருங்கள். எதிலும் நிதானத்துடன் முடிவு எடுங்கள்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் பொருளாதார நிலை சுமாராக இருக்கும். சகோதர சகோதரிகள் யாரேனும் ஒருவர் உங்களுக்கு பிடித்தமான ஒன்றைப் பரிசாக அளிப்பார்கள். உணவு விஷயத்தில் கட்டுப்பாடுடன் இருப்பது ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக அமையும்.

**பரிகாரம்:**
வெள்ளிக்கிழமை தோறும் மஹாலட்சுமிக்கு தாமரை மலர் அர்ப்பணிக்க குடும்பத்தில் இருக்கும் பிரச்சினைகள் தீரும்.



## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து உங்கள் ராசிக்கு மாறியுள்ளார்.

**பலன்:**
தொழிலில் நஷ்டம், நிம்மதியின்மை என தவித்து வந்த விருச்சிக ராசி அன்பர்களே, இந்த குரு பெயர்ச்சி உங்களுக்கு நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். விரய ஸ்தானத்தில் இருந்த குரு இப்போது ராசிக்கு வருகிறார். இதன் மூலம் பஞ்சம ஸ்தானத்தையும், களத்திர ஸ்தானத்தையும், பாக்கிய ஸ்தானத்தையும் பார்க்கிறார். சனி பகவானால் ஏற்பட்ட பணக் கஷ்டம், உறவினர்களுடன் இருந்து வந்த தகராறுகள் என அனைத்தையும் குரு பகவான் சரி செய்வார்.

குடும்பாதிபதி குரு பகவான் ராசியில் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். அது சம்பந்தமான வழக்குகள் உங்களுக்குச் சாதகமாக முடியும். கணவன் - மனைவி இடையே இருந்த மனஸ்தாபங்கள் அகலும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பார்கள். உங்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் நடந்து கொள்வார்கள். திருமணத் தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

தொழில் - வியாபாரம் எப்போதும் போல் இருக்கும் என்றாலும் உங்களின் இடைவிடாத முயற்சியால் லாபம் பெறலாம். எதிர்பார்த்த லாபம் இல்லை என்று மனம் கலங்க வேண்டாம். நஷ்டம் இல்லாமல் தொழில் செய்ய பகவான் அருள் புரிவார்.

**உத்யோகத்தர்களுக்கு -**
அதிர்ஷ்டத்தால் சில வாய்ப்புகள் கிடைக்கும். வெளியில் கொடுத்த பணம் சில அலைச்சல்களுக்குப் பின் கிடைக்கும். சக ஊழியருடன் தேவையில்லாத வாக்கு வாதங்களில் ஈடுபடவேண்டாம். கிடைக்கும் நேரத்தை பயனுள்ளதாக கழிப்பதன் மூலம் தேவையில்லாத பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

**பெண்களுக்கு -**
திருமண வாழ்க்கையில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். கணவன் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பது உங்களுக்கு மன மகிழ்ச்சியைத் தரும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு -**
சிறப்பான காலமாக இருக்கும். பெற்றோர்களின் தொழிலைப் படிப்பவர்களுக்கு சிறப்பாக இருக்கும். நன்றாக கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். சிறந்த குரு கிடைப்பார்.

**அரசியல் துறையினருக்கு -**
பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். மனைவி வழியில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து வாழ்வில் சந்தோஷம் பிறக்கும். மேலிடத்திலிருந்து அழைப்பு வரும்.

**கலைத்துறையினருக்கு-**
பொருளாதார ரீதியாக சிறப்பாக இல்லை என்றாலும், புகழ், பாராட்டு மற்றும் ரசிகர்கள் பெருகுவார்கள். உங்கள் சொந்த ஊரில் நல்ல பெயர் கிடைக்கும்.

**விசாகம் 4ஆம் பாதம்:**
இந்த குரு பெயர்ச்சியில் உற்றார், உறவினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். கால் நடைகள் அபிவிருத்தி அடையும். புதிய நிலம் வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.


**அனுஷம்:**
இந்த குரு பெயர்ச்சியில் வியாபாரிகள் புது வாடிக்கையாளர்களை நம்பி கடன் கொடுக்க வேண்டாம். ஏனெனில் வசூலாவதில் சிக்கல்கள் ஏற்படக் கூடும். மற்றபடி பிரச்சினைகள் ஏதும் வராது. பெற்றோருக்கு பெருமை தேடித் தருவீர்கள்.

**கேட்டை:**
இந்த குரு பெயர்ச்சியில் சுபவிரயங்கள் உண்டாகலாம். தங்களுக்குச் சம்பந்தமான விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டாம். எதிலும் சற்று நிதானத்துடன் நடந்து கொள்ள நன்மை நடக்கும்.

**பரிகாரம்:**
செவ்வாய்கிழமை தோறும் முருகப்பெருமானுக்கு அரளி மாலை சாற்றி வழிபட மனதில் இருக்கும் குழப்பங்கள் தீரும்.

காலைக்கதிர் Kalaikkathir





## இப்படியும் ஒரு விநோத சடங்கு:

# திருமணம் முடிந்தவுடன் நிர்வாண கோலத்தில் 5 நாள்கள் மணப்பெண்!

இந்தியாவில் தொழில்நுட்பம் வளர்ந்துக்கொண்டே வருகிறது. நிலாவில் பெரும் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. கூடிய விரைவில் வல்லரசு நாடாகிவிடும் என இந்தியாவின் ஏறு முகத்தை பற்றியே நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்னும் பல மாநிலங்களில் பழங்குடி மலைவாழ் மக்கள் மத்தியில் சில பழமையான, விசித்திர மான சடங்கு முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

பழமைகளை பின்பற்ற வேண்டியது அவசியம் தான். ஆனால், அறிவியல் வளர்ந்த பிறகு கண்மூடித் தனமாக வெறுமென காரண, காரியமே இல்லாமல் சில



மோசமான சடங்குகளை பின்பற்றுகின்றமையைத்தான் திருத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தில் இருக்கும் ஒரு பழங்குடி மலைவாழ் மக்கள் மத்தியில் இன்றளவும் பழக்கத்தில் பின்பற்றப்படும் விநோதமாக கருதப்படும் ஒரு சடங்காகப் பற்றி தான் இந்த தொகுப்பினில் காண விருக்கிறோம்.

ஹிமாச்சல பிரதேசத்தை சேர்ந்த ஒரு மலைவாழ் பழங்குடியினர் மத்தியில், ஒரு சடங்கு முறை இன்றளவும் கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இதை யாராலும் கனவிலும் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஆம்! திருமணமான நாளில் இருந்து முதல் ஐந்து நாள்கள் மணப்பெண் நிர்வாணமாக




வீட்டில் இருக்க வேண்டும்.

இதுவரை நாம் அறிந்ததில், படித்ததில் இது மிகவும் விநோதமான சடங்காக இருக்கிறது. மிக நீண்ட காலமாக இந்த சடங்கு முறையை ஹிமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த அந்த மலைவாழ் பழங்குடியினர் பின்பற்றி வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

ஹிமாச்சல பிரதேசத்தில் இந்த சடங்கைப் பின்பற்றி வரும் அந்த பழங்குடியினர் ஒரு குக்கிராமத்தில் வசித்து வருகிறார்கள். இங்கே இன்றளவிலும் திருமணம் முடித்த புதுப்பெண் முதல் ஐந்து நாள்கள் கணவன் வீட்டில் நிர்வாணமாக ஓர் அறையில் தங்க வேண்டிய சடங்கு முறை பின்பற்றப்படுகிறது.

புதுமணப்பெண் நிர்வாணமாக இருக்கும் அந்த ஐந்து நாள்களில் கணவன் – மனைவி இடையே தாம்பத்தியம் குறித்தோ, காதல் லீலை சார்ந்த பேச்சுக்களோ இருக்கவே கூடாது. ஏன், அந்த ஐந்து நாள்களில் புதுமண தம்பதியினர் உடல் ரீதியான உறவில் இணையவோ ஒருவரை ஒருவர் தொட்டுக் கூட பேசவோ கூடாது என்றும் அறியப்படுகிறது.

ஹிமாச்சல பிரதேசத்தின் அந்த குக்கிராமத்தில் வசித்து வரும் மலைவாழ் பழங்குடி மக்கள் இந்த சடங்கின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த சடங்கு நல்லப்படியாக முடிந்து விட்டால், கணவன் – மனைவி உறவில் ஒரு கட்டுப்



பாடு இருக்கும். அந்த திருமண வாழ்க்கை ஒருபோதும் தோல்வியில் முடியாது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஒருவேளை யாரேனும் ஒரு புதுமண தம்பதியர் அந்த ஐந்து நாள்களில் புது மணப்பெண் நிர்வாணமாக இருக்கும் போது தொட்டு பேசி விட்டாலோ, அல்லது உறவு கொண்டு விட்டாலோ, அது அந்த கிராமத்திற்கு கேடு விளைவிக்கும் அல்லது பெரும் நாசத்தை ஏற்படுத்தும் என்று அந்த மலைவாழ் பழங்குடியினர் நம்புகிறார்கள். *

# உலகெங்கும் சோதிப்பிழம்பாக...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முருகனது மிகச்சிறந்த அடியார் அகத்தியராவார். தமிழ் மூதாட்டி ஔவை முருகனால் ஆட்கொள்ளப்பட்ட அடியவராகிறார். ஆதிசங்கரர் தனக்கேற்பட்ட காசநோய் தீர முருகனைத் துதித்து சுப்ரமண்யப் புஜங்கம் பாடினார். வள்ளலாருக்கு அவரின் வீட்டுக் கண்ணாடியில் தோன்றி முருகன் ஆட்கொண்டார். சங்கீதமும் மூர்த்திகளுள் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதரின் வாயில் கற்கண்டைப் போட்டு ஸ்ரீநாததி குருகுஹோ என்னும் கீர்த்தனையைப் பாடவைத்தார். ஊமையாய் பிறந்த குமரகுருபரருக்கு திருச்செந்தூர் முருகன் உலகமே புகழும்வண்ணம் கவி பாட வைத்தார்.

**முருகனது காதலால் கட்டுண்ட அடியவர்கள்**

சிதம்பர சுவாமிகள் பனைமரத்தில் முருகனைசுயம்புவாகப்பிரதிஷ்டைசெய்து அருள்பெற்றார். வள்ளிமலைச்சுவாமிகள், வண்ணச்சரபம்தண்டபாணி சுவாமிகள் பாம்பன் சுவாமிகள், பன்றிமலைச் சுவாமிகள், இவர்களெல்லாம் முருகனது காதலால் கட்டுண்ட அடியவர்களாவர்.

முருகன் பற்றிய சகலவற்றையும் உணர்த்திடும் கந்தபுராணம் தந்தவர் கச்சியப்பர். அவருக்கு அடியெடுத்துக் கொடுத்து அருள் புரிந்தார் முருகன். அதனால் அற்புதமாய் தெய்வீகமாய் ஒளிர்ந்தது கந்தபுராணம்.

வீடுதோறும் முருகன் அடியவர்களால் ஓதிநிற்கும் பேறுபெற்ற கந்த சஷ்டி கவசத்தை முருகன் அடியவர் பாலதேவராயன் எமக்களித்துச் சென்றுள்ளார்.

எமக்கு முன்னால் இருந்து தனது பாட்டாலும் பேச்சாலும் எழுத்தாலும் முருகன் பெருமையினை உலகம் முழுவது கொண்டுசேர்த்த முருகன் அடியவர்தான் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். ஊர்கள் தோறும் ,நாடுகள் தோறும் சென்று முருகன்புகழை கதாப் பிரசங்கம் மூலம் எடுத்துச் சொல்லி அதில் கிடைத்த பொருளையெல்லாம் வயலூரில் முருகனுக்காகப் பேராலயம் அமைத்து பெரும் பேறு பெற்றார்.

இந்தியாவில் முருகன் அடியார்கள் ஆலயங்களுடன் எப்படிதம்மை பிணைத்துக் கொண்டார்களோ அதேபோல் ஈழத்திலும் அடியார்கள் முருகனுடனும் அவரது ஆலயத்துடனும் தங்களை இணைத்துக் கொண்டனர். ஈழத்திலே பல பிரசித்தியும் அருளும் கொண்ட முருகன் ஆலயங்கள் இருக்கின்றன. பாடல்பெற்ற முருகனது ஆலயமாக கதிர்காமம், திருகோணமலை ஆகியன விளங்குகின்றன.

ஈழத்தில் தமிழ் அடியார்களும் சிங்கள பௌத்த அடியார்களும் முருகனின் பக்தர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் முருகனை கதரகம தெய்யோ என்று அழைக்கின்றனர். அவர்களது. கதிர்காமம் ஈழத்தில் முருகனின் பொக்கிஷமாய் இருக்கிறது என்பது முருகன் அடியார்களுக்கே பெருமை எனலாம்.

தமிழர்கள் செறிந்துவாழும் வட மாகாணம், கிழக்கு மாகாணம் பகுதிகளில் நிறைந்த முருகன் அடியார்கள் இருக்கிறார்கள். இவர்களின் ஆதரவினால் பல முருகன் ஆலயங்கள் அங்கு எழுந்துநின்று அருளாட்சியினை வழங்கி நிற்கின்றன எனலாம்.

யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயம் மாருதப்புரவீக வல்லி என்னும் சோழ இளவரசியின் வரலாற்றுடன் தொடர்புபட்ட மிகவும்புராதன ஆலயமாக விளங்குகிறது. யாழ்நகர் மத்தியிலே விளங்கும்நல்லூர் கந்தசுவாமிகோவில் உலகம் அறிந்த முருகனது கோவிலாக இருக்கிறது. அருள் உள்ளம் கொண்ட மாப்பாண முதலியார் என்னும் முருகன் அடியவரால் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் பலரது வாழ்வுக்கும்வெளிச்சமாய் இருக்கிறது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

கதிகாமம் போன்று பூஜைகள் நடைபெறும் ஆலயமாக இருப்பது செல்வச்சந்நிதி முருகன் ஆலயமாகும்.

கிழக்கு மாகாணத்தில் வெருகலில் முருகன்ஆலயம் தொடங்கிதிருக்கோவில் முருகனது ஆலயம்வரை அடியவர்களின் உந்துதலினால் உருவாக்கப்பட்டனவே என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

ஈழத்தின் ஏனைய பகுதிகளிலும் முருகன்அடியார்களின் சிந்தனையினால் முருகனது ஆலயங்கள் அருளாட்சி புரிந்து வருகின்றன.

**மலேசிய மண்ணில் பத்துமலை முருகன் ஆலயம்**

மலேசிய மண் என்றதும் யாவருக்கும் முன்னேவந்துநிற்பது பத்துமலை முருகன் ஆலயமே ஆகும். மலேசியாவையே அடையாளப் படுத்தும் வகையில் இம் முருகன் ஆலயம் விளங்குகிறது என்பது உலகில்இருக்கும் முருகன் அடியவர்களுக்கெல்லாம் பெருமை என்றே சொல்லலாம். இம் முருகன் ஆலயம் இங்குள்ள அடியவரின் இருதயமாக வேதான் இருக்கிறது என்பது வெள்ளிடைமலையாகும். இங்குள்ள முருகன்அடியார்கள் தங்களின் ஒவ்வொரு நடவடிக்கையினையும் பத்துமலை முருகன் பார்த்துக்கொள்ளுவான் என்றே எண்ணி வாழ்கிறார்கள் எனலாம்.

சிங்கபூரிலும் முருகன் அடியார்கள் முருகன்ஆலயத்துடன்தம்மைஇணைத்து பக்திசிரத்தையுடன் தமது நடவிடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் எனலாம் நான் தற்பொழுது வாழுகின்ற ஆஸ்திரேலியாவிலேமுருகன்வணக்கமும் முருகன் ஆலயங்களும் செறிந்து காணப்படுகின்றன.

விக்டோரியா மாநிலத்தில் சண்சைன் என்னுமிடத்திலும்,றொக்பேங் என்னும் இடத்திலும் முருகனுக்கு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன.

சிட்னியில் மிகவும் பெரிய முருகன் ஆலயம் இருக்கிறது போர்த்தில் ஒரு முருகன் ஆலயம் இருக்கிறது.. ஆஸ்திரேலிய தலைநகரான கன்பராவில் அறுபடை குருகன் ஆலயம் அமைந்திருக்கிறது.

இங்கு அமைக்கப்பட்ட முருகன் ஆலயங்கள் யாவும் புலம்பெயர்ந்து வந்த அடியவர்களின் ஆதரவினால் அமைக்கப்பட்டன.

முருகன் என்றாலே கலியுகத் தெய்வம் என்னும் எண்ணமே அனைத்து அடியவர்கள் மனத்திலும் ஊன்றியிருக் கிறது எனலாம். கூப்பிட்ட குரலுக்குஓடிவரும் தெய்வமாகவே முருகனை அடியவர்கள் கருதுகிறார்கள். ஆலயம் அமைக்க வேண்டும் என்னும் எண்ணம் வந்தவுடன் முருகனுக்கே ஆலயம் அமைப்போம் என்பதே அனைத்து அடியார்களின் மனக்கருத்தாய் வெளிவருகிறது. பொதுவாக நோக்கும் பொழுது உலகெங்கணும் முருகன் ஆலயங்கள் இன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வகையிலேதான் அமையப்பெற்றிருக்கின்றன. யாவருடைய மனத்திலும் முருகா



என்னும் நாமம் வல்லமை பொருந்திய மந்திரமாக உறைந்து விட்டது என்றே சொல்லலாம்.

முருகன் ஆலயங்களை அடியார்கள் அமைக்கும் பொழுது முருகனது கையிலுள்ள வேலியையும் வழிபடுமுகமாகவும் ஆலயங்களை அமைத்திருக்கிறார்கள். அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ் ஞான ஒளியை முருகனது வேல் நல்குவதாக அடியார் நம்புகின்றமையால் வேலினுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்களில் வேல் வழிபாடும் முக்கியமாகிறது. ஈழத்தில் கதிர்காமம், செல்வச்சந்நிதி ஆலயங்களில் வேல்தான் அடியவர்களால் வணங்கிப்போற்றப்படுகிறது. கணினி யுகத்தில் கந்தப்பெருமான் துணையேஎமக்குப்பெருந்துணையாகும். முருகனை அல்லும் பகலும் அனைவரதமும் துதிக்கும்அடியவர்களும்அவர்களின் அன்பினால் விளைந்த ஆலயங்களும் அகிலத்துக்கும் ஆன்மீக நெறியினை உணர்த்துவதற்கு உறுதுணையாகவே இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

விழிக்குத்துணை நின்திரு மென்மலர்ப்பாதங்கள் மெய்மை குன்றா மொழிக் குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த பழிக்குத்துணை அவன் பன்னிருதோளும் பயந்ததனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

# ‘சிந்துச் சமவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே’

முரளிதரன் காசிவிஸ்வநாதன்



ஹரப்பா, மொஹஞ்சதரோ இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டு, அந்த ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டு (செப்ரெம்பர் 20, 1924) 94 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கும் நிலையில், சிந்துச் சமவெளிப் பகுதியிலும் தமிழக பகுதிகளிலும் கிடைத்த பானை ஓடுகளில் உள்ள ஒற்றுமைகளை வைத்து சிந்துவெளி நாகரிகம் என்பது திராவிட நாகரிகமே என்பதை நிறுவ முடியும் என்கிறார் ஒடிஷா மாநில கூடுதல் தலைமைச் செயலரும் ஆய்வாளருமான ஆர். பாலகிருஷ்ணன்.

சென்னையில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் The Pot Route: from Indus to Vaigai என்ற தலைப்பில் வியாழக்கிழமையன்று இது தொடர்பாக உரை நிகழ்த்திய ஆர். பாலகிருஷ்ணன், தன் உரைக்குப் பிறகு பி.பி.சி. செய்தியாளர் முரளிதரன் காசிவிஸ்வநாதனிடம் பேசினார். அதிலிருந்து.

**கேள்வி:-** சிந்துச் சமவெளி ஆய்வு முடிவுகள் வெளியாகி 94 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. அந்த ஆய்வு முடிவென்பது தமிழ் வரலாற்று ஆய்வில் எவ்வளவு முக்கியமானது?

**பதில்:-** 1924 செப்ரெம்பர் 20 என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள். இந்த நாகரிகம் குறித்த செய்திகள் வரும் முன்பாக நம்முடைய புரிதல் வேறு மாதிரி இருந்தது. இப்படி ஒரு நாகரிகம் இருந்ததே தெரியாது. அது தெரிந்த பிறகுதான் இந்திய வரலாற்றை வேறு மாதிரி பார்க்கும் பழக்கமே ஏற்பட்டது. ஆய்வு முடிவு வெளிவந்தபோதே இது திராவிட நாகரிகமாக இருக்கும் வாய்ப்பு இருக்கிறதென அப்போதே சொல்லப் பட்டது. அதற்குப் பிறகும் பலரும் இது குறித்துப் பேசியிருக்கிறார்கள். சாட்டர்ஜி, கிராஸ் பாதிரியார், அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன் போன்ற பல ஆய்வாளர்கள்



இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது பல்துறைகளைச் சேர்ந்த ஆய்வுகள், அதில் கிடைத்த தரவுகள் மூலமாக இது ஒரு திராவிட நாகரிகமாக இருக்கக்கூடும் என்ற சாத்தியக்கூறு உண்டு என்று சொல்வதையெல்லாம் தாண்டி, இது ஒரு திராவிட நாகரிகமே என்று சொல்லக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**கேள்வி:-** இந்த ஆய்வு முடிவு வெளியாகும் முன்பாக இந்திய வரலாற்றைப் பார்ப்பது எப்படி இருந்தது, இந்த நாகரிகம் குறித்த முடிவுகள் வெளியான பிறகு எப்படி மாறியது?

**பதில்:-** தரைக்குள் இப்படி ஒன்று இருந்தது தெரியாத காலகட்டத்தில் நம் நாகரிகத்தைப்பற்றிச் சொல்ல இலக்கியங்கள் மட்டுமே இருந்தன. அப்போது வெளிநாட்டு ஆய்வாளர்களால் படிக்கக் கூடிய வகையில் இருந்தது வடமொழி இலக்கியங்கள்தான். அதனால், இந்தியப் பண்பாட்டின் துவக்கத்தை வேதத்திலிருந்து துவங்கும் பழக்கம் இருந்தது. வேதகால நாகரிகத்திற்கு முன்பாக வசித்தவர்கள் பண்பாடற்றவர்கள் போலவும் அதற்குப் பிறகுதான் பண்பாடு வந்தது போலவுமே வரலாறு அணுகப்பட்டது. ஆனால், 4,500 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மிகப் பெரிய நகரம் இருந்தது, அது தரையில் புதைந்து கிடந்தது என்பது தெரிந்த பிறகு எல்லாமே மாறிவிட்டது.

**கேள்வி:-** பானை ஓடுகளை வைத்து சிந்துவெளி நாகரிகம் குறித்து சில முடிவுகளுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். என்ன முடிவு அது?

**பதில்:-** யானை சென்ற பாதையை வைத்து யானைத் தடத்தைக் கண்டு பிடிப்பதுபோல, இது பானைத் தடம். Silk route, Spice route என்றெல்லாம் இருப்பதைப் போல இது Pot Route என்பதை நாங்கள் முன்வைக்கிறோம். ஹரப்பாவில் கிடைத்த பானை வகைகளில் பெரும்பாலானவை கறுப்பு – சிவப்பு வண்ணம் கொண்டவை. ஆனால், கங்கைச் சமவெளிப் பகுதிகளில் கிடைத்தவை வண்ணம் தீட்டப்பட்ட பழுப்பு நிற மண் பாண்டங்கள். ஆனால், ஹரப்பாவுக்கு தென்பகுதியில் குஜராத், மகாராஷ்டிரா பகுதிகளில் கிடைப்பது எல்லாமே கறுப்பு – சிவப்பு வண்ணம் கொண்டவைதான். ஆனால், வரலாற்றாளர்கள், இதனை முதுமக்கள் தாழியோடு தொடர்புபடுத்தி பெருங்கற்கால மட்பாண்டங்கள் என்று ஒதுக்கிவைத்து விடுகிறார்கள். அதற்கு மேல் ஏதும் நடப்பதில்லை. இப்போது நாங்கள் முதல் முறையாக ஒரு மேப்பை தயார் செய்து, painted greyware என்ற பழுப்பு நிற பானை ஓடுகள் கிடைத்த கங்கைச் சமவெளியைச் சுற்றி, கறுப்பு – சிவப்பு வண்ண பானைகளைப் பயன்படுத்தும் கலாசாரம்தான் சூழ்ந்திருந்தது; ஆகவே இந்த கறுப்பு – சிவப்பு வண்ணப் பானைகளைப் பயன்படுத்தும் கலாசாரத்தின் தொடர்ச்சியை ஆராய வேண்டுமென்ற கருத்தை முன்வைத்திருக்கிறோம்.

**கேள்வி:-** பானை ஓடுகளை வைத்து சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என எப்படி நிறுவுவீர்கள்?

**பதில்:-** முன்பு சொன்னதைப் போல இதுவும் ஒரு பல்துறை ஆய்வுதான். சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்ததைப் போன்ற பானை ஓடுகள் கீழடியிலும் கிடைத்திருக்கின்றன. பானைகள் புலம் பெயர்ந்து வந்திருக்க முடியுமா? ஒவ்வொரு பானைக்கும் பின்னாலும் ஒரு பானை செய்பவர் இருக்கிறார். அவருடைய சமூகப் பின்புலத்தை ஆராய வேண்டும். சிந்துச் சமவெளி நாகரிகத்தில் பானை செய்பவர் என்னவாக அழைக்கப்பட்டிருப்பார் என்பது தெரியவில்லை. ஆனால், அவருடைய இடம் முக்கியமானதாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரி ஒரு நகரத்தில் செங்கல் சூளை வைத்திருந்தவர்கள், பானை செய்பவர்கள் ஆகியோருக்குத்தான் முக்கியத்துவம் இருந்திருக்கும். அதுபோன்ற ஒரு முக்கியத்துவத்தை பானை செய்பவர்களுக்குக் கொடுத்த இலக்கியம் சங்க இலக்கியம் தான்.

சங்க இலக்கியத்தில் பானை செய்யும் குயவனை முதுவாய்க்குயவ என்று அழைக்கிறார்கள். அதாவது நீண்டகால



அறிவைக் கொண்ட குயவர் என்று பொருள். இந்த நீண்டகால அறிவு என்பது எதைக் குறிக்கிறது? அதுதான் அந்த நாகரிகத்தின் ஆழம். அதேபோல முதுமக்கள் தாழி செய்யும் குயவரை கலம்செய் கோவே என்கிறார்கள். அதாவது பானை செய்பவரை தலைவன் என்று அழைக்கும் சமூகப் பண்பாடு அப்போது இருந்திருக்கிறது. இந்த சமூகப் பண்பை நாம் மறுக்க முடியாது. இந்த சமூகப் பண்பு வட மாநிலங்களில் உள்ள சமூகப் பண்புக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது.

குயவர்களுக்கு இருக்கக்கூடிய குலப் பெயர்கள், வம்சாவழிப் பெயர்கள், குடிப் பெயர்கள், சாமி பெயர்கள், கோவில் பெயர்கள் எல்லாமே அந்தப் பாதை நெடுக இருக்கிறது. பானை என்பது அந்தப் பானை மட்டுமல்ல. அந்த பானை, அதைச் செய்பவர் சார்ந்த சமூகம்.

**கேள்வி:-** சிந்துச் சமவெளியில் கிடைத்த பானை ஓடுகளில் இருந்த எழுத்துகளுக்கும் தமிழ்நாட்டில் கிடைத்த பானை ஓடுகளில் இருந்த எழுத்துகளுக்கும் ஏதாவது ஒற்றுமை இருந்திருக்கிறதா?

**பதில்:-** நிறைய இடங்களில் இருந்திருக்கிறது. ஆங்கிலத்தில் grafitti என்பார்கள். அதாவது பானைகளில் இருக்கக்கூடிய கீறல்கள். இந்தக் கீறல்கள் எழுத்துகளாக மாறியிருக்கின்றன. இந்த எழுத்துக் கீறல் உள்ள பானை என்று சொன்னால், இந்தியாவில் கிடைத்த பானைகளில் 80 சதவீதம் தமிழ்நாட்டில் தான் கிடைத்திருக்கிறது. எழுத்துகள் எழுதப்பட ஆரம்பித்ததே பானைகளிலாகத் தான் இருக்க




முடியும். கஷ்டப்பட்டு கற்களில் எழுதியிருக்கலாம். ஆக, எழுத்து வரிவடிவம் ஆகியவை ஆரம்பித்ததே பானைகளில் தான். இம்மாதிரி எழுதுவது சிந்துச் சமவெளியிலும் தமிழகத்திலும் அதிகமாக இருக்கிறது. சங்க இலக்கியத்தில் இது குறிப்பிடப்படுகிறது. பீடும் பெயரும் எழுதி என்று குறிப்பிடுகிறார்கள். இப்படியாக பானைகளில் எழுதியவை தான் நமக்கு அதிகமாகக் கிடைக்கின்றன. அதற்குப் பிறகு தமிழ் பிராமி எழுத்துகளில் எழுதியவை கிடைக்கின்றன. இது ஒரு தொடர்ச்சியாக நடந்திருக்கிறது. இதைத்தான் நான் சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்று சொல்கிறேன். சிந்துவெளி எப்போது இல்லாமல் போகிறதோ அப்போது சங்க இலக்கியம் பேச ஆரம்பிக்கிறது. சங்க இலக்கியம் பேசும் நிகழ்வுகள் எல்லாம் அப்போதைய நிகழ்கால நிகழ்ச்சிகள் அல்ல.

அவர்கள் கேள்விப்பட்ட நிகழ்ச்சிகளை, ஆயிரம் ஆண்டுகளாக தம் சமூகத்திற்குள் கேட்டுவந்த கதைகளைத்தான் அவர்கள் கவிதையாக மாற்றுகிறார்கள். அதில் பேசப்படும் விஷயம் எல்லாம் பழைய விஷயம். அது பழைய நகரங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஹரப்பாவுக்கென ஒரு இலக்கியம் இருந்தால் அது இப்படித்தான் இருக்கும்.

**கேள்வி:-** ஹரப்பா, மொஹஞ்சதாரோ பகுதிகள் இந்தியாவின் வட மேற்கில் இருக்கின்றன. சங்க இலக்கியம் தென்னிந்தியாவில் தோன்றியது. இடைப்பட்ட நிலப்பரப்பில் என்ன நடந்தது?

**பதில்:-** கலாசாரம் நிலங்களைக் கடந்து பயணிக்கும். ஆப்கானிஸ்தானில் சார்த்துகை என்று ஓர் இடம் இருக்கிறது. அந்த இடம் மொஹஞ்சதரோவிலிருந்து வடமேற்கில் 1900 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. செல்வதற்கான பாதையே மிகக் கடினமான பாதை. அந்த சார்த்துகையில் லாபஸ் லாஜுலி என்ற விலை உயர்ந்த கற்கள் கிடைக்கும். அவற்றை




வைத்து அணிகலன்களைச் செய்வதற்காக சிலர் அங்கே குடியேறினார்கள். அங்கேயும் இதேபோல பானைகளைச் செய்தார்கள். அதை இப்போது ஹரப்பிய நாகரிகம் என ஒப்புக்கொள்கிறோம். மொஹஞ்ச– தரோவுக்கும் கீழடிக்கும் இடையில் கிட்டத்தட்ட அவ்வளவு தூரம் தான் இருக்கும். இந்த இரு நிலப்பரப்புக்கும் இடையில் தொடர்ச்சி இருக்கிறது.

மகாராஷ்டிரா, குஜராத் குயவர்களுடைய வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் தென்னிந்திய குயவர்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஆக பழக்க – வழக்க தொடர்பு இருக்கிறது, இலக்கியத் தொடர்பு இருக்கிறது. இவற்றைத் தனித்தனியாகப் பார்க்கக்கூடாது.

**கேள்வி:-** சிந்துவெளி நாகரிகத்தில் பானை செய்பவர்கள் உயர்ந்த இடத்தில் இருந்ததனர் எனச் சொன்னீர்கள். அவர்கள் சமூகத்தில் அடைந்த வீழ்ச்சியும் வேதகால நாகரிகத்தின் எழுச்சியும் சந்திக்கும் புள்ளி ஒன்றாக இருந்ததா?

(12ஆம் பக்கம் பார்க்க)

# சோகத்தில் முடிவடைந்த ஹிட்லரின் முதல் காதல்!



## சகோதரியின் 17 வயது மகள் மீது அவருக்கு ஏற்பட்ட ‘மன்மத மயக்கம்’

உலக வரலாறு என்று வரும்போது அதில் தவிர்க்க முடியாத ஒரு பெயர் ஹிட்லர். உலகின் மிகமுக்கியமான அதேசமயம் கொடூரமான சர்வாதிகாரியாக கருதப்படுபவர் ஹிட்லர். ஜேர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர் உலகமே தன் காலின் கீழ் இருக்க வேண்டுமென நினைத்தார். அதற்காக அவர் செய்த செயல்கள் உலகையே அச்சுறுத்தியது. ஹிட்லர் என்றாலே கொடூரமானவர் என்றுதான் உலகம் முழுவதும் கருத்து உள்ளது. அது ஓரளவுக்கு இருந்தாலும் அவரும் காதல்வயப்பட்டது பலரும் அறியாத ஒரு தகவலாகும். அப்படியே அறிந்திருந்தாலும் அது அவரின் இறுதி காதலை பற்றித்தான் இருக்கும். ஆனால் அவரின் முதல் காதலைப் பற்றி பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த பதிவில் ஹிட்லரின் முதல் காதலி யார் என்பதையும் அந்தக் காதலின் முடிவு என்னவென்பதையும் பார்க்கலாம்.

ஹிட்லரின் காதலி Image Courtesy ஹிட்லரின் முதல் காதலியின் பெயர் கெலி ரூபல். கெலியின் 17ஆவது வயதில்தான் ஹிட்லர் அவர் வாழ்க்கையில் நுழைந்தார். ஹிட்லர் கெலியின் மாமா ஆவார். கெலியின் அம்மா ஏஞ்செலாவும் ஹிட்லரும் ஒரே அப்பாவுக்கு பிறந்தவர்கள். ஹிட்லருக்கும், கெலிக்கும் இடையேயான உறவு 1925ல் ஏஞ்செலாவின் அப்பா இறந்த பிறகுதான் தொடங்கியது.

தான் இன்னும் 6 வருடங்கள் ஹிட்லரின் ஆதரவுடன்தான் வாழ வேண்டும் என்று கெலி உணர்ந்தபோது ஹிட்லருக்கும், கெலிக்கும் இடையேயான வயது வித்தியாசம் 19 வருடம் ஆகும். காலங்கள் கடந்தன. ஹிட்லரும், கெலியும் நெருக்கமானார்கள். 4 வருடங்கள் கழித்து கெலியின் அம்மா ஏஞ்செலா அந்த வீட்டை விட்டு வேறு இடத்திற்கு செல்ல முற்பட்டார். அவருக்கு வேறு வாய்ப்பும் இல்லை. ஏனெனில் அது ஹிட்லரின் கட்டளை ஆகும்.

### கெலியின் ரம்மியமான பேச்சில் மயங்கிய ஹிட்லர்

ஆண்டுகள் கடந்தன. கெலி ரூபல் ஹிட்லரின் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்டார். ஹிட்லர் செல்ல முடியாத வணிக கூட்டங்களுக்கு அவருக்கு பதிலாக செல்வது, அவரின் அதிகாரிகளுக்கு கட்டளையிடுவது, அவருடன் வெளியே செல்வது போன்ற செயல்களை செய்துகொண்டிருந்தார். இரவு பகலாக கெலியின் ரம்மியமான பேச்சில் ஹிட்லர் மயங்கி இருந்தார். ஹிட்லருக்கு கெலி ஒரு போதையாகவே மாறிப் போனார்.

கெலி எங்கு சென்றாலும் ஹிட்லரும் அவர் உடனேயே செல்வார். தன்னால் செல்ல முடியாத நேரத்தில் கெலியை கண்காணிக்க பாதுகாவலர்களை அனுப்புவார். இது ஒருவகையான சந்தேகம் கலந்த பொறாமை என்றுகூட சொல்லலாம். ஆரம்பத்தில் கெலியின் வெறும் பாதுகாவலராக மட்டுமே இருந்த ஹிட்லர் நாளடைவில் அவர் மீது அதிகாரம் செலுத்த தொடங்கி விட்டார். கெலியாலும் சக்திவாய்ந்த இந்த அடக்குமுறையாளரை எதிர்கொள்ள முடியவில்லை.

### கெலியின் சுதந்திரம்

நாள்கள் கடக்க கடக்க கெலியின் சுதந்திரமும், மகிழ்ச்சியும் பறிபோனது. கெலிக்கும், அவரின் ஓட்டுநருக்கு இடையே இருந்த உறவு ஹிட்லருக்கு தெரிய வந்தவுடன் ஹிட்லர் கெலியின் காதலரை கொன்றுவிட்டார். அதன் பின் கெலியின் சுதந்திரம் முழுமையாக பறிக்கப்பட்டது. அவருக்கு வெளியே செல்ல அனுமதி மறுக்கப்பட்டது, அவரின் நண்பர்களைக் கூட பார்க்க அனுமதி அளிக்கப்படவில்லை. தன்னுடைய போதையாக இருந்த அந்த இளம் பெண்ணை இழக்க ஹிட்லருக்கு மனம் வரவில்லை. கெலியின் மீது தீவிர காதலில் இருந்தார் ஹிட்லர். ஹிட்லரின் பொறாமை ஹிட்லரின் காதல் அதிகரிக்க அதிகரிக்க அவரின் பொறாமையும், கோபமும் அதிகரித்து கொண்டே சென்றது. தன்னுடைய பாதுகாப்பற்ற உணர்வால் கெலியின் மீதான அவரின் கட்டுப்பாடு அதிகரித்துக்கொண்டே இருந்தது. அவர்களுக்குள் இருந்த காதல் நோய்வாய்ப்பட்ட காதலாக மாறிவிட்டது. அதேசமயம் உலகளவிலும் ஹிட்லருக்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்தன.

கெலியின் சுதந்திரம் பறிக்கப்பட்டவுடன் அவர் ஹிட்லரிடம் இருந்து விலகிச் செல்ல நினைத்தார். ஜேர்மனியில் இருந்து விலகி வியட்நாமுக்குச் சென்று ஒரு பாடகியாக மாற வேண்டும் அங்கே ஒருவரை காதலித்து திருமணம் செய்துகொண்டு புதிய வாழ்க்கையை தொடங்க எண்ணினார்.

ஹிட்லரின் காதல் முடிவுக்கு வரும் காலமும் வந்தது. ஒருநாள் ஹிட்லர் வெளியே செல்லும்போது கெலி ஜன்னல் அருகில் வந்து எது பற்றியோ கத்தி கேட்டார். அதற்கு ஹிட்லர் அறவே முடியாது என்று பதிலளித்து விட்டார். பிறகு கெலி வீட்டில் அவர் மார்பில் துப்பாக்கி குண்டு துளைக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். அந்த துப்பாக்கி ஹிட்லரிடம் இருந்து திருடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அது கொலையா அல்லது தற்கொலையா என்பது இன்றும் புரியாத மர்மமாக உள்ளது. அது தற்கொலையாக கருதப்பட்டாலும் கெலியின் டைரியில் தற்கொலை பற்றிய எந்த குறிப்புகளும் இல்லை. அந்த கடிதத்தில் அவரின் எதிர்கால திட்டங்கள் பற்றி மட்டுமே எழுதப்பட்டிருந்தது. இதற்கு காரணம் திருப்தியற்ற கலைத்துவ சாதனை என்று கூறப்பட்டது. அதன் பின் அவரின் உடல் கத்தோலிக்க கல்லறையில் புதைக்கப்பட்டது.

இந்தச் செய்தியை கேட்டு ஹிட்லர் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானார் என்றும் கெலியின் கல்லறையில் நீண்ட நேரம் நின்றவாறு அழுதார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் கெலியின் மறைவு ஹிட்லரின் இலட்சியத்தை தடுக்கவில்லை. இந்த செய்தி விரைவில் மக்களின் நினைவுகளில் இருந்து திட்டமிட்டு அழிக்கப்பட்டது.

ஹிட்லர் கெலியை தன் பாலியல் ஆசைகளுக்காக பயன்படுத்தி கொண்டாரா என்பது தெரியாத ஒன்று. ஆனால் கெலி மீது அவர் அளவற்ற அன்பு வைத்திருந்தார் என்பது உண்மை. ஏனெனில் கெலிக்கு அவ்வளவு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும் இது அனைவராலும் ஒரு முறையற்ற உறவாகவே கருதப்படுகிறது. கெலியின் மறைவுக்கு பின்னர் தன் இறுதிக்காலத்தில் ஹிட்லர் ஒரு பத்திரிகையாளரைத் திருமணம் செய்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘சிந்துச் சமவெளி விட்ட...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** அப்படித்தான் தெரிகிறது. கன்வர்ஸ் என்ற ஆய்வறிஞர் இந்த கறுப்பு – சிவப்பு பானை செய்பவர்களும் பழுப்பு நிற பானை செய்பவர்களும் கங்கைச் சமவெளியில் சில நூறு கி.மீ. தூரத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தாலும் அவர்களுக்கு இடையில் எந்தப் பரிமாற்றமும் இருக்கவில்லை. ஐநூறு, அறுநூறு ஆண்டுகளுக்குப் பிறகே இரு பண்பாடுகளும் சந்தித்துக்கொண்டன. ஒரு பக்கம் ஹரப்பா நாகரிகத்தில் பானை, செங்கல் செய்பவர்கள் உயர்ந்த இடத்தில் இருந்திருப்பார்கள் என்று யூகிப்பதற்கு அங்கு கிடைத்த தொல்பொருள் தடயங்கள் ஆதாரமாக இருக்கின்றன. அவர்கள் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டார்கள். அவர்களே விழாக்களை அறிவித்தார்கள். அவர்களே பூசாரிகளாக இருந்தார்கள். அவர்களே தலைவன் என அறிவிக்கப்பட்டார்கள். இதற்கெல்லாம் சங்க இலக்கியத்திலும் நம்முடைய மட்பாண்டக் கீறல்களிலும் தடயங்கள் இருக்கின்றன. ஏதோ உயர்ந்த இடத்திலிருந்து கீழே வந்துவிட்டோம் என்ற உணர்வு இந்தியாவில் உள்ள எல்லாக் குயவர்கள் மத்தியிலும் இருக்கிறது.

அதாவது சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம், எழுச்சி, சரிவு, வீழ்ச்சி ஆகியவையும் பானை செய்வோரின் தோற்றம், எழுச்சி, சரிவு, வீழ்ச்சி ஆகியவையும் இணையாக நடந்திருக்கின்றன. எப்போதுமே ஒரு வருத்தம், இழந்தது குறித்த கோபம், மனத்தாங்கலால் அவர்களுடைய வாய்மொழி மரபில் இருந்து கொண்டேயிருக்கிறது. இது ஒரு கூட்டு மனப்பான்மையாக இருக்கிறது. இதை அவர்கள் காலம்காலமாக கடத்திவந்திருக்கிறார்கள். இதை ஆராய வேண்டியிருக்கிறது. தொல்லியல் என்பது கிடைக்கும் பொருள்கள் சம்பந்தப்பட்டது. ஆனால் இம்மாதிரியான வரலாற்று ஆய்வு எல்லாத் துறைகளையும் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

**கேள்வி:-** சிந்துவெளிக்கு அருகில் இருப்பது கங்கைச் சமவெளி. நீங்கள் குறிப்பிடும் வைகைச் சமவெளி வெகுதூரத்தில் இருக்கிறது. சிந்துவெளி நாகரிகம் ஏன் கங்கைச் சமவெளிக்குப் பரவவில்லை?

**பதில்:-** சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சியைச் சந்திக்க ஆரம்பித்தபோது எல்லோருமே அங்கிருந்து தெற்கு நோக்கி வந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் அங்கேயே தங்கிவிட்டார்கள். சிலர் கிழக்கு நோக்கி நகர்ந்து கங்கைச் சமவெளியை அடைந்தார்கள். அங்கிருந்த நாகரிகத்தின் மீது அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். அதேபோல கங்கைச் சமவெளி நாகரிகத்தின் தாக்கம் அவர்களிடமும் இருந்திருக்கும். புதிய மொழியையும் கலாசாரத்தையும் கற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். பண்பாட்டுத் தாக்கம் இருந்திருக்கும்.

ஆனால், தமிழ்நாடு மிகவும் வெளியில் இருப்பதால் அவர்கள் தங்கள் பண்பாட்டுக் கூறுகளைத் தக்கவைத்திருப்பார்கள். மற்ற இடங்களில் அது குறைவாக இருந்திருக்கும். அதனால் அடையாளம் காண்பது சிரமமாக இருக்கும். இந்தியாவில் யாரைச் சுரண்டிப் பார்த்தாலும் ஹரப்பாவின் கூறு ஏதாவது இருக்கும். யாரிடம் அதிகம் இருக்கும் என்பது விவாதத்திற்குரியது.

சிந்து நாகரிகத்தின் நகர்ப்புற குடியேற்றங்கள் தற்போதைய வடமேற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் பரவியுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாம் பெரிதாக அகழ்வாய்வுகளைச் செய்யவில்லை. திராவிடக் கருதுகோள்களின் அடிப்படையில் நாம் ஆய்வுகளைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அந்த ஆய்வை குஜராத், மகாராஷ்டிரா, சிந்து, கங்கைச் சமவெளி, வைகைச் சமவெளி என எல்லா இடங்களிலும் செய்ய வேண்டும்.

**கேள்வி:-** வைகைக் கரையில் ஏற்கனவே கீழடியில் அகழ்வு செய்யப்பட்டிருக்கிறது. வேறு எங்கு செய்ய வேண்டும்?

**பதில்:-** வைகைக் கரையை ஒட்டிய 200 இடங்கள் அகழ்வாய்வு தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை. நான் ஏற்கனவே கீழ் – மேல் என்பது குறித்து சொல்லியிருக்கிறேன் (அதாவது கீழ் என்பது எப்போதும் கிழக்குப் பகுதியிலும் மேல் என்பது மேற்குப் பகுதியிலும் இருப்பதோடு, உயர்வானதாகவும் கருதப்படும். சிந்துவெளியிலும் இப்படித்தான் இருந்தது என்பது பாலகிருஷ்ணனின் வாதம்). இந்த இடங்களில் கீழ் – மேல் விகுதிகளோடு உள்ள இடங்கள், வைகைக் கரையோரமாக இருக்கும் அகழாய்வு சாத்தியமுள்ள இடங்களை நிச்சயம் ஆய்வுசெய்ய வேண்டும்.

இதில் இடங்களின் பெயர்கள் மிக முக்கியமானவை. அவை சாகாவரம் பெற்றவை. அவை நாகரிகத்தின் துவக்கத்திற்கும் மலர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் சாட்சியமாக இருக்கின்றன. அவை சாவதில்லை.

**கேள்வி:-** உங்களுடைய முந்தைய ஆய்வு சிந்துவெளியின் இடப்பெயர்வுகள் பற்றியது. அதில் நீங்கள் சொல்லியிருப்பது என்ன?

**பதில்:-** மனிதன் தொடர்ந்து இடம் மாறிக்கொண்டேயிருப்பவன். இப்படி புலம் பெயர்வது என்பது மனிதனின் அடிப்படைகளில் ஒன்று. இப்படிப் புலம்பெயரும்போது அவன் எதை எடுத்துச்செல்ல முடியும்? அவன் தன் பூமியைத் தோண்டி எடுத்துச் செல்ல முடியாது. நினைவுகளைத்தான் எடுத்துச்செல்ல முடியும். தான் செல்லும் புதிய இடத்தில் அவன் தன் பழைய இடத்தை மீள் உருவாக்கம் செய்வான். அப்படிச் செய்யும்போது தன் பழைய ஊர்ப் பெயரை எடுத்துச் செல்வான். கடவுள் நம்பிக்கையை எடுத்துச்செல்வான். இப்படிப் புலம் பெயர்பவர்களோடு, இடப்பெயர்வுகளும் புலம் பெயரும். அப்படி தமிழகத்திலும் சிந்துச் சமவெளியிலும் இருந்த இடப்பெயர்வுகளை நான் என் ஆய்வில் ஒப்பிட்டிருக்கிறேன்.

**கேள்வி:-** தற்போது வெளியாகியிருக்கும் ராகிகடி மரபணு ஆய்வு முடிவுகள், சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்று சுட்டிக்காட்டுவதைப்போல இருப்பதாகச் சொல்கிறது...

**பதில்:-** ராகிகடி ஆய்வு முடிவுகள் இப்போதுதான் வெளியாகத் துவங்கியிருக்கின்றன. முறைப்படி இன்னும் முழுமையாக வெளியாகவில்லை. ஆனால், இந்த முடிவு தனிப்பட்ட முறையில் எனக்கு வியப்பு எதையும் தரவில்லை. கிட்டத்தட்ட எதிர்பார்த்த விஷயம்தான். முழுமையான முடிவை நானும் அவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

(முற்றும்)

### செபமாலை செபிக்க திருத்தந்தை அழைப்பு


செபமாலை அன்னை மரியாவின் மாதமான அக்டோபரில் ஒறுத்தல் முயற்சிகளோடு ஒன்றிணைந்து செபமாலை செபிக்க திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். இறைவனிடமிருந்து இவ்வுலக மக்களைப் பிரிக்கவும் மக்களிடையே பிரிவுகளை உருவாக்கவும் முயன்றுவரும் தீயோனிடமிருந்து நம்மைக் காத்துக் கொள்ள இந்த அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு நாளும் விசுவாசிகள் செபமாலையை செபிக்குமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வேண்டுகோள் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kālaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### திரு அவைக்காக செபமாலை செபியுங்கள்

செபமாலை அன்னை மரியாவின் மாதமான அக்டோபரில் திருஅவையைப் பாதுகாக்க செபமாலை செபிப்பதோடு தலைமைத் தூதரான மிக்கேலின் உதவியையும் நாடுவோம் எனத் திருத்தந்தை விடுத்துள்ள ஒரு சிற்றறிக்கையை திருப்பீட செய்தித் தொடர்பகம் வெளியிட்டுள்ளது. பால்டிக் நாடுகளில் தன் திருத்தூதுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த விண்ணப்பத்தை விடுத்தார்.

# கத்தோலிக்க மாணவன் சேர்வின் லேனாட் மெக்சிக்கோ சர்வதேச நிகழ்வில் சாதனை





யாழ் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்கை சேர்ந்தவரும் யாழ் சென் ஜோண்ஸ் கல்லூரி மாணவனுமாகிய சேர்வின் லேனாட் 16 – 18 ஆகஸ்ற் 2018இல் மெக்சிக்கோவில் இடம்பெற்ற முதலாவது உலக இயந்திர மனித ஒலிம்பிக் கண்டுபிடிப்பு – 2018 போட்டி யில் கலந்துகொண்ட 5பேர்கொண்ட இலங்கை குழுவில் அங்கத்தவராகி மெக்சிக்கோ சென்று தனது திறமையை நிரூபித்து சாதனை படைத்துள்ளார்.

'ஆற்றலின் தாக்கம்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தப் போட்டி இவ்வாண்டில் நடைபெறும் இரண்டாவது போட்டியாகும். இது இளைஞர்களுக்கு அறிவியல் தொழில் நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய துறைகளில் மாணவர்கள் தம் அறிவை வளர்க்க களம் தருகிறது. இப்போட்டியில் 186 உலக நாடுகளில் இருந்து 192 அணிகள் பங்கு பற்றி இருந்தன. 14 – 18 வயதினருக்கிடையிலான இந்த போட்டியில் இரண்டு ஆசிரியர்களும் சென்று மத்தியஸ்த விருது பெற்றனர். இப்போட்டியில் மத்தியஸ்த விருதுடன் இயந்திர கைவினைக்கருவிகள் விருதையும் இவர்கள் பெற்றுக் கொண்டனர்.

யாழ் சென் ஜோண்ஸ் கல்லூரி க.பொ.த உயர் தரத்தில் முதலாம் ஆண்டு கணித பிரிவில் கல்வி கற்று வரும் சேர்வின் லேனாட் ஒரு இயந்திர பொறியி லாளராக ஆர்வம் கொண்டுள்ளார். இவர் 2016ஆம் ஆண்டு கொழும்பில் இடம் பெற்ற அகில இலங்கை போட்டியில் தனது கண்டுபிடிப்பிற்காக 2ஆம் இடத்திற்கான தேசிய விருது பெற்றார் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய தகவலாகும். சேர்வின் ஸ்ரீபன் லேனாட் காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்து தெரிவிக்கும் போது மெக்சிக்கோ சென்று இந்த போட்டியில்; கலந்து கொண்டு எனது திறமையை நிருபிக்க எனக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்திற்காக மகிழ்கிறேன். இதற்கு வழிசெய்த எனது பெற்றோர் ஆசிரியர்கள், ஊக்கம் கொடுத்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். எமது எதிர்கால சந்ததியினருக்கும் இந்த இயந் திர மனிதன் பற்றி அறியவும் அனுபவம் பெறவும் வாய்ப்பு கிட்ட வேண்டும். – என்றார்.

# மொன்றியல் தமிழ் கத்தோலிக்க மீட்பின் அன்னை மறைத்தளத்தில் யாழ். ஆயர்



கனடா மொன்றியல் தமிழ் கத்தோலிக்க மீட்பின் அன்னை மறைத்தளத்திற்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த 30 செப்ரெம்பர் 2018 அன்று ஆண்டின் பொதுக்கால 26ஆம் வார ஞாயிறு நாளில் வருகை தந்து புனித மிக்கேல் திருத்தூதரின் திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார். யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது மறையுரையில் திருத்தூதர்களது பணிகளைத் தெளிவாக எடுத்துரைத்தமையோடு கத்தோலிக்க விசுவாசிகளான நாங்கள் ஒவ்வொருவரும் எல்லாம் வல்ல இறைவனால் எமக்கு வழங்கப்பட்டுள்ள காவல் தூதர்களது பாதுகாப்பில் வாழ்கிறோம் என்பதனையும் காவல்தூதர்கள் எமக்காகப் பரிந்து பேசி செபிக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டார். தனது தற்போதைய கனடா வருகையின் முன்னர் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய 2018ஆம் வருட வருடாந்த திருவிழாவிற்கு அழைப்புக் கிடைத்ததாகவும் கனடா வருகையினால் அதில் பங்கெடுக்க முடியாவிடினும் கனடா மொன்றியல் மீட்பின் அன்னை மறைத் தளத்தில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய மக்களால் முன்னெடுக்கப்பட்ட விழாவில் தலைமை தாங்கி திருப்பலி ஒப்புக்கொடுப்பதில் மகிழ்வடைகிறார் என ஆயர் மேலும் குறிப்பிட்டார். மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தள பங்குத்தந்தை அருட்திரு யூட் நிக்சன் அடிகளார், மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தாள சிற்பி அன்ட்ரூ தவராஜசிங்கம் அடிகளார் மற்றும் எல்மோ ஜெயராஜா அடிகளார் ஆகியோரும் ஆயர் அவர்களோடு கூட்டுத் திருப்பலியில் இணைந்து கொண்டனர். திருப்பலி முடிவில் புனித மிக்கேல் திருத்தூதரின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றது. திருப்பலியின் பின்னர் ஆயர் கனடா மொன்றியல் தமிழ் கத்தோலிக்க மீட்பின் அன்னை மறைத் தள மக்களுடனான பொது சந்திப்பு ஒன்றிலும் கலந்துகொண்டார்.

(கனடா மொன்றியலிலிருந்து சூசை முத்து அல்பிரட் ஞானராஜா)

# உண்மையின் எண்ணங்கள்

## சந்தர்ப்பம் கொடுங்கள் சாதிப்பர் தமிழ் இளைஞர்

யாழ்நல்லூர்புனித ஆசீர்வாதப்பர்ஆலய பங்கைசேர்ந்தவரும் யாழ்சென்ஜோண்ஸ் கல்லூரி மாணவனுமாகிய சேர்வின் லேனாட் மெக்சிக்கோவில் இடம்பெற்ற முதலாவது உலக இயந்திர மனித ஒலிம்பிக் கண்டுபிடிப்பு – 2018 போட்டியில் கலந்து தனது திறமையை நிருபித்து சாதனை படைத்துள்ளார். சேர்வின் ஸ்ரீபன் லேனாட் தனது படைப்பாற்றல் மிக்க சாதனையில் தொடர வேண்டுமென காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாரட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

தமிழ் இளைஞர்கள், யுவதிகள் புலம்பெயர் மண்ணில் கல்வியிலோ விளையாட்டிலோ அல்லது இதர செயற்பாடுகளிலோ உலக அரங்கில் நிகழ்த்தும் நிகழ்வுகள் – வென்றெடுத்து வரும் வரும்; வெற்றிகள் – படைக்கும் சாதனைகள் என்பன பற்றிய செய்திகள் அவர்கள் யாருக்கும் இரண்டாம்தர பிரஜைகள் அல்லார் என்பதைத் தெளிவாக நிருபித்து வருகிறது. அண்மைக்கால வரலாற்றில் இலங்கை மண்ணிலும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட படியால் பல விளையாட்டுக்களில் தேசிய அணியில் அவர்கள் இடம் பிடித்து வருகிறார்கள். தம் திறமைகளை வெளிக்கொணரத் தொடங்கியுள்ளாகள். கூடைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் தமிழ் இளைஞர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். 40 ஆண்டுகளின் பின்னர் தேசிய துடுப்பாட்ட அணியில் யாழ் மத்திய கல்லூரி மாணவன் விஜயகாந் இணைக்கப்பட்டுள்ளார். யாழ் பல்கலைக்கழக மாணவன் ஞானரூபன் என்பவருடன் மேலும் மூவர் தேசிய உதைபந் தாட்ட அணியில் உள்ளனர். தருசினி கூடைப் பந்தாட்ட அணியில் பிரகாசித்து வருகிறார். இவ்வாறு பட்டியல் நீள்கிறது. சந்தர்ப்பம் கொடுங்கள் சாதிப்பார்கள், தமிழ் இளைஞர்கள்

# கரிதாஸ் புலமைப்பரிசில் போலந்து உதவித் திட்டத்தில்





யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் போலாந்து நாட்டின் நிதிப் பங்களிப்புடன் தந்தை மற்றும் தாய் இழந்த மாணவர்களுக்கும் அத்தோடு வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களையும் உள்ளடக்கி புலமைப் பரிசில் திட்டம் ஒன்று செயற்படுகின்றது. உயர்தரம் கல்வி கற்கும் 25 மாணவர்களும் பல்கலைகழக கல்வியை தொடரும் 12 மாணவர்களும் இத்திட்டத்தில் உள்ளவாங்கப் பட்டுள்ளார்கள். இவர்களுக்கு கடந்த 16 மாதங்களாக கல்விக்கான உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் வறுமைக்கோட்டின் கீழுள்ள கல்விக்கான உதவித்திட்டத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த 3 மாணவர்களுக்கும் கடந்த மே மாதம் 2018 ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 5 மாதங்களாக இந்த உதவித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்களுடைய கல்விப் பெறுபேறுகள் முன்னேற்றம் கண்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்து கடந்த காலங்களில் நாட்டின் பிள்ளைகள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தமையை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இது பற்றி அனைத்துக் கல்வித்துறை அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இன்றைய தினம்(நேற்று) அனுஷ்டிக்கப்படும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அனைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி , ஆசிரியர்கள் மேற்கொண்டு வரும் உன்னதமான பணியைப் பாராட்டினார்.

இலவசக் கல்வியின் மூலம் சமூகத்திற்குப் பயனுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்கு ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் அர்ப்பணிப்பை பாராட்டிய ஜனாதிபதி, ஆசிரியர் தொழிலின் உரிமைகள், சலுகைகளை வெற்றி கொள்வதற்கும் ஆசிரியர்களுக்கு உயர்ந்த கௌரவத்தைப் பெற்றுக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடி விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடத்தையும் மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தையும் ஜனாதிபதி மாணவர்களிடம் கையளித்தார்.

கல்லூரியின் 2017ஆம் ஆண்டில் விசேட திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கான விருதுகள் மற்றும் பரிசல்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார். (ஐ)

## இலங்கைக் கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையுடன் தனது ஒத்துழைப்பை வலுப்படுத்தும், நோக்குடன் ஜப்பான் இந்தக் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்கிறது.

அத்துடன் பிராந்தியத்தில் சீனாவின் கடல்சார் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில், வெளிப்படையாகச் சீனாவுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கும் நோக்கம் ஜப்பானுக்கு இருக்கிறது என்றும், இதனுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டுப் பயிற்சியின் போது, ஜப்பானியக் கடற்படையின் நாசகாரி மற்றும் உலங்குவானூர்தித் தாங்கிக் கப்பலான ககாவில் இருந்து எவ்வாறு மீட்பு நடவடிக்கைகள், மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இலங்கைக் கடற்படை அதிகாரிகள் பயிற்சி பெறவுள்ளனர்.

ஜப்பானியக் கடற்படையின் பயிற்சிகளையும் அவர்கள் அவதானிக்கவுள்ளனர்.

கடலில் ஒரு பயிற்சியின் போது, தமது எந்தவொரு கப்பலிலும், ஏனைய நாடு ஒன்றின் அதிகாரிகளை ஜப்பானியக் கடற்படை ஏறுவதற்கு அனுமதிப்பது அரிதான ஒன்று என, ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சின் கடல்சார் அதிகாரிகள் பணியகத்தின், பொதுசன தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையுடனான பயிற்சிகள் குறித்துக் கருத்து வெளியிட்ட ஜப்பானியக் கடற்படை அதிகாரி ஒருவர், நாங்கள் குறிப்பிட்ட எந்த நாட்டையும் மனதில் வைத்துக் கொண்டு, எதையும் செய்யவில்லை. இது இந்தோ – பசுபிக் மூலோபாயத்தின் ஓர் அங்கம் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய பெருங்கடலில் கடல்சார் தளங்களை சீனா உருவாக்க முயற்சிக்கும் நிலையில், இலங்கையுடனான தமது உறவுகளை ஆழப்படுத்தும் நோக்கில் ஜப்பான் செயற்படுகிறது என நம்பப்படுவதாகவும், ஜிஜி பிரஸ் ஊடகம் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்கவே இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டு எதிரணி எந்தத் தீர்மானம் ஒன்றை எடுக்கும்போதும் மக்களின் கருத்தை அறிய வேண்டும். தற்போது காணப்படும் நிலைமைக்கு அமைய உடனடியாகத் தேர்தல் ஒன்றே நடத்தப்படவேண்டும்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதும், இதே யோசனையை அவர்கள் முன் வைத்தனர்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார் எனத் தெரிவித்து கொண்டு வந்தனர். இறுதி நேரத்தில் ஜனாதிபதி அதனைக் கைவிட்டார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னால் ஓடியதால், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பெற்ற வெற்றியை எம்மால் அனுபவிக்க முடியாமல் போனது. அத்துடன் பிளவுபட்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையால் ஐக்கியமானது.

கூட்டு எதிரணியை ஏமாற்றவே புதிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனை முன்வைக்கப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்குள்ளது. என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்போம்.

நாட்டுக்காக எடுக்கப்படும் சிறந்த தீர்மானங்களை கூட்டு எதிரணி ஆதரிக்கும். மக்களின் கருத்தையும் அறியவேண்டும்.

நாட்டை அழித்த ரணில் – மைத்திரி இருவரில் ஒருவருடன் இணைவதையும் மக்கள் விரும்பமாட்டார்கள். தேர்தலுக்குச் சென்று அரசைக் கலைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருந்தோம்.

நாட்டின் நிலைமையைப் பார்க்கும்போது, இந்த அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் இருக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது எப்படி நம்பிக்கை வைப்பது? கடந்த பொதுத் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்றாலும் பிரதமராக நியமிக்கமாட்டேன் என மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இதனால், கூட்டு எதிரணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து அமைக்கும் அரசில் யார் பிரதமர் போன்ற விடயங்கள் பற்றியும் பேசவேண்டியுள்ளது. – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு காரணமாகக் கைவிடப்பட்டுள்ளன. எனினும் கைவிடப்பட்ட சந்திப்புக்களை வேறு இடங்களில் ஒழுங்கு செய்ய ஏற்பாட்டாளர்கள் தரப்பு தீவிரமாக முயன்று வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் நிறைவடையும் நிலையில் அதற்குப் பின்னர் வடக்கில் தனது பிடியை இறுக்கி, ஆளுனர் குரே அரசியல் செய்யத் தயாராகிறார் என வடக்கு மாகாண சபையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் அவரது லண்டன் சந்திப்புக்களும் சவால்களை எதிர்நோக்கியுள்ளன.

ஹரோ ரெயினஸ்லேன் பகுதியிலுள்ள உணவு விடுதி ஒன்றில் நேற்று பிற்பகலில் ஆளுநர் நடத்த இருந்த சந்திப்பு கைவிடப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேபோல இன்று லூசியம் பகுதியில் அவர் நடத்தவிருந்த சந்திப்பு ஒன்று தமிழ் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையால் கைவிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

எனினும் மாற்று இடங்களில் சந்திப்புக்களை ஒழுங்கு செய்வதற்கு ஏற்பாட்டுத் தரப்பு முயன்று வருகிறது என்று கூறப்பட்டது.(ஐ)

## ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன கடைசி நேரத்தில் மூன்று மாத கால சேவை நீடிப்பை வழங்கியிருப்பது, இராணுவ உயர்மட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இராணுவத் தலைமை அதிகாரி மற்றும் பிரதித் தலைமை அதிகாரி பதவியில் நியமிக்கப்படும் வாய்ப்புள்ளவர்கள் என எதிர்பார்த்திருந்த மேஜர் ஜெனரல்கள் மத்தியிலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ, ஓய்வுபெறாதமையால், பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழக்கும் அல்லது பதவி உயர்வு தாமதமடையக் கூடிய மேஜர் ஜெனரல்களே குழப்பமடைந்துள்ளனர்.

பாதுகாப்புப் படைகளின் தளபதிகளுக்கு மாத்திரமே, சேவை நீடிப்பு வழங்கப்படுவது கடந்த பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு ஆகும். தளபதியாக நியமிக்கப்படும் வாய்ப்பை இழக்கும் ஏனைய மூத்த அதிகாரிகள் ஓய்வுபெற்றுச் செல்லவேண்டும்.

அண்மைக்கால வரலாற்றில், இராணுவத் தளபதியாக அல்லாத மூத்த ஓர் அதிகாரிக்குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட ஒரே ஒரு நிகழ்வு இடம்பெற்றது. 2009ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரிசிறிக்கு , சேவை நீடிப்பு வழங்கப்பட்ட சந்தர்ப்பமே அதுவாகும். சேவை நீடிப்புக்குப் பின்னர், அவர் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுக்கு, 2019 ஒகஸ்ட் 19ஆம் திகதி வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐக்கியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுயாட்சி கோரி அறவழியில் போராடிய தமிழ் மக்களின் கோரிக்கைகள் முதலாளித்துவ அரசுகளால் நிராகரிக்கப்பட்டமையையடுத்தே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி மறவழியில் போராடத் துவங்கினர்.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதையடுத்து அப்போராட்டத்தை ஜனநாயக வழியில் அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்லவேண்டிய முக்கிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்தது. எனினும், இதுவிடயத்தில் கூட்டமைப்பினர் உரிய வகையில் செயற்படவில்லை. அவர்களிடம் உறுதியான கொள்கை இருக்கவில்லை.

மத்திய அரசுகள் மீது வைத்த நம்பிக்கைக்கு பதிலாக, வீதியில் இறங்கி தொடர்போராட்டங்களை நடத்தியிருந்தால்கூட அனைத்துலக சமூகம் களமிறங்கியிருக்கக்கூடும். நல்லாட்சியென கூறப்படும் அரசுக்குப் பின்னால் கூட்டமைப்பு சென்றது. அதைத் தருமாறும், இதை வழங்குமாறும் கேட்டது. இறுதியில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

அடுத்த மாதம் ஆரம்பமானதும் வரவு – செலவுத்திட்டம் குறித்தும், ஆட்சிக்கவிழ்ப்பு குறித்துமே பேசப்படும். முஸ்லிம் கட்சிகள் மஹிந்த பக்கம் தாவக்கூடும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் புதிய அரசமைப்பு பற்றியோ அல்லது தீர்வுத்திட்டம் சம்பந்தமாகவே பேசுவதற்கு இடமேயில்லை. அத்துடன், கட்சித் தாவல்களால் கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தியும் குறைவடையும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசுகளாலும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமல்போனது. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அவசியம் என்பதை எமது கட்சியே அன்று முதல் இன்றுவரை வலியுறுத்தி வருகின்றது.

எனவே, பிரிந்து செல்வதா அல்லது கூட்டாக இருப்பதா என்பது குறித்து ஸ்கொட்லாந்து மக்களிடையே கருத்துகணிப்பு நடத்தப்பட்டது. அதுதான் உயரிய ஜனநாயம். அந்த பாணியில் வடக்கு, கிழக்கு மக்களிடையே கருத்து கணிப்பு நடத்தப்பட வேண்டும். இதை வலியுறுத்தி எமது கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. – என்றார். (ஐ)

## நிதிமோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சியாம்மஹாநிக்காயபௌத்த பீடத்தின் மல்வத்து பிரிவின் சிரேஷ்ட பௌத்த செயற்குழு உறுப்பினர் அக்கமஹா பண்டித அளுத்கம தம்மானந்த தேரரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்திய பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராகப் பொய் வழக்கு தொடரப்பட்டுள்ளது. பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் மூலம் அரசியல் பழிவாங்கல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்ள வேண்டாம் என அரசிடம் கேட்டுகொள்கிறேன். – என்றார். (ஐ)

## இலங்கையை அண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூறாவளியாக மாற்றமடையும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என நேற்று மாலை எதிர்வு கூறப்பட்டது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நேற்று மாலை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இந்தத் தாழமுக்க நிலை வடமேல் திசையாக ஓமானை நோக்கி நகர்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மன்னார் முதல் புத்தளம், கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களில் கடும் மழையுடனான வானிலை நிலவும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசும் சாத்தியமும் காணப்படுவதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

களுத்துறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கடலோரப் பகுதிகளில் அலையின் சீற்றம் 2 முதல் 2.5 மீற்றர் வரை உயர்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாகக் கடல்சார் தொழில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லிமீற்றர் முதல் 150 மில்லிமீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஐ)

## மைத்திரி - மஹி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை எஸ்.பி. திஸாநாயக்கவின் கொழும்பிலுள்ள இல்லத்தில் மைத்திரி–மஹிந்த இடையே சந்திப்பொன்று இடம்பெற்றதாகவும், அதில் நாட்டில் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாகப் பேசப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் நேற்றுச் சிங்கள ஊடகமொன்றுக்கு எஸ்.பி.திஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் –

நான் கடந்த வாரத்தில் கொழும்பிலுள்ள எனது இல்லத்தில் தங்கியிருக்கவில்லை. அப்போது எவ்வாறு இத்தகைய சந்திப்பொன்று இடம்பெற்றிருக்க முடியும்? இந்தத் தகவல் உண்மைக்கு புறம்பானது–என்றார். (ஐ)

## இந்தோனேசியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைந்து பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தோனேசியாவின் சுலாவேசி தீவில் பலு நகரில் கடந்த வாரம் நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டது. அதில் பலு நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின.

1,571 பேர் பலியாகினர் என இந்தோனேசிய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. 1000 பேரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணி நடைபெற்று வரும் நிலையில் மேலும் 1000 பேரை காணவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. சுனாமியின் போது அவர்கள் மண்ணில் புதைந்து பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சுனாமி தாக்குதலில் பலு நகரம் அழிந்த நிலையில் உள்ளது. பெரும்பாலான பகுதிகள் தரைமட்டமாகிவிட்டன. பெரும்பாலான வீதிகள் சுனாமியில் அடித்து செல்லப்பட்டு விட்டன. அந்த நகரை சீரமைக்க 6 மாதம் முதல் ஒருவருடம் வரை ஆகலாம் என இந்தோனேசிய துணை அதிபர் ஜுசுப்கல்லா தெரிவித்தார். அதற்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மைத்திரிபாலவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசநாயக்கவின் இல்லத்தில் இடம்பெற்றதாகவும், பசில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் இதில் பங்கேற்றனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியையும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டமை தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இந்தச்சதித்திட்டம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தெரியாத பல விடயங்களை, மஹிந்த வெளிப்படுத்தியுள்ளார்.

கூட்டு அரசில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகி, கூட்டு எதிரணியுடன் இணைந்து மேற்பார்வை அரசு ஒன்றை அமைக்கும் திட்டம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ள சூழலிலேயே இந்த இரகசியச் சந்திப்பு பற்றிய தகவல்களும் வெளிவந்துள்ளன. எனினும், இந்தச் சந்திப்பு எப்போது நடந்தது என்ற விவரங்கள் ஏதும், வெளியாகவில்லை. (ஐ)

# மனைவிக்காக இதயகாவியம்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டுக்கலந்திடப்பத்தினிப் பெண் கேட்டான் பாரதி. ஓர் எழுத்தாளனுக்கு மனைவியின் ப்பிட்ட இந்த நூலில்தான் மேற்சொன்ன சத்தியவாக்குகளை பதிவுசெய்துள்ளார். ஏற்கனவே மறைந்துவிட்ட தமது மனைவியை இந்த நூலில் நினைவுபடுத்துகிறார். அவரது சத்தியவரிகள் எம்மை நெகிழ்ச்சியூட்டுபவை.

மனைவியின் மறைவுக்குப்பின்னர் அவர் வீரகேசரியில் எழுதிய தொடர்கதை தான் ஒரு காவியம் நிறைவேறுகிறது. அதில் அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நீடித்த இறுக்கமான பாசம் இழையோடுகிறது. அவர் மனைவிக்கு மாளிகை கட்டவில்லை. மனதிலும் நினைவுக் கோட்டை எழுப்பவில்லை. ஆனால், இதயத்தால் படைத்தார் ஒரு காவியம்.

இராசரத்தினம் அவர்களை எதிர்பாராத விதமாக கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடந்த ஓர் இலக்கியக் கூட்டத்தில்தான் முதல் முதலில் சந்தித்தேன்.

அவர் எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து அந்நியப்பட்டிருந்தார். ஏற்கனவே கொழும்பு சாகிராக்கல்லூரியில் நடந்த சங்கத்தின் மாநாட்டில் எஸ்.பொன்னுத்துரையுடன் இணைந்து வெளியேறியவர் இராசரத்தினம். ஆனால், அக்காலகட்டம் எனது மாணவப்பருவம். எனினும் 1970 இற்குப்பின்னர் பல இலக்கியப் புதி




னங்களை அறிந்தபொழுதுதான் அவரது கதைகளையும் படித்து அவர் பற்றிய தகவல்களும்தெரிந்துகொண்டேன். அவரது பாலை சிறுகதையை படித்ததுமுதல் அவரைத் தேடிக்கொண்டிருந்தேன். அவருடனான முதல் சந்திப்பிலும் அதிகம் உரையாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மீண்டும் 1986 இல் எதிர்பாராத விதமாக அவரை நீர்கொழும்பில் கடற்கரை வீதியில் சந்தித்தேன். அச்சமயம் மஹாகவி உருத்திரமூர்த்தியின் மூத்த புதல்வர் பாண்டியன் தமது உக்ரேய்ன் மனைவியுடனும் குழந்தை எல்லாளனுடனும் மாஸ்கோவிலிருந்து இலங்கை வந்து எமது வீட்டுக்கும் வந்திருந்தார். ஒருநாள் அவருடன் சைக்கிளில் கடற்கரைக்குச்சென்று மீன் வாங்கிக் கொண்டுவரும் வழியில் இராசரத்தினத்தை சந்தித்தேன்.

அவர் தமது நண்பர் ஒருவரை சந்திப்பதற்காக அவசரப்பயணம் வந்து பஸ் நிலையத்திற்கு திரும்பிக்கொண்டிருந்தார். முதலில் அவரால் என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. என்னை அறி முகப்படுத்தி, உடனிருந்த மஹாகவியின் புதல்வரையும் அறிமுகப்படுத்தியதும் அவரது முகம் பிரகாசமடைந்தது.

வீட்டிற்கு அழைத்து வந்து உபசரித்த பொழுது சாகவாசமாக பேசக்கிடைத்தது. நான் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்திருப்பதும் மல்லிகையில் அடிக்கடி எழுதுவதும் அவருக்கு நன்குதெரியும். எனது நீர்கொழும்பு பிரதேச மீனவ மக்களின் கதைகளை படித்துவிட்டு தானும் என்னைத் தேடிக்கொண்டிருந்ததார் என்றும் அம்மக்களின் பேச்சுவழக்கு தம்மை கவர்ந்தது என்றும் சொன்ன அவர், நான் குறிப்பிட்ட மீனவ சமூகத்தைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும் என்றும் நம்பிக் கொண்டிருந்திருக்கிறார்.

எனினும் – எனது பெயர் அவருக்கு புது மையாக இருந்ததாகவும் சொன்னார்.

எனது குடும்பப்பின்னணியை அறிந்ததும், கடலின் கரையில் நின்று கொண்டு கடலுக்குள் நடப்பதை இலக்கியத்திற்குள் கொண்டுவருவதில் இருக்கும் கஷ்டங்களையும் சொன்னார். படைப்பாளி தான் வாழும் சூழலை சித்திரிக்கவேண்டும். சித்திரிக்கும் பாத்திரங்கள் வாழும் மண்ணின் வாசனையை படைப்புகளில் நுகரச்செய்ய வேண்டும். அதுவே யதார்த்த இலக்கியம் என்றும் சோஷலிஸ யதார்த்தப்பார்வை அது... இது... என்று விமர்சகர்கள் உமது சிந்தனையையும் கற்பனை வளத்தையும் சிதறடித்துவிடு வார்கள். கவனம்....! என்றும் ஒரு தந்தையைப்போன்று ஆலோசனைகள் கூறினார்.

மல்லிகை ஜீவாவுடன் கருத்தியலில் தனக்கும் முரண்பாடுகள் இருந்தாலும் அவர் மல்லிகை ஊடாக நீர்கொழும்பு, திக்குவல்லை, அநுராதபுரம், புத்தளம், உடப்பு , மன்னார் பிரதேச படைப்பாளிகளுக்கு களம் தந்து இந்தப்பிரதேசங்களின் மண்வாச னையை வாசகர் தெரிந்துகொள்வதற்கு வழிவகை செய்துள்ளார் என்று ஜீவாவுக்கு சான்றிதழ் வழங்கவும் அவர் தவறவில்லை.

இராசரத்தினம் மல்லிகையின் 1979 ஜூன் இதழ் முகப்பினை அலங்கரித்தவர். வழக்கமாக மல்லிகை ஜீவா அவ்வாறு ஒருவரை பாராட்டி முகப்பு அட்டையில் கௌரவிக்கும்பொழுது எவரையும் தூண்டி குறித்த கௌரவத்துக்குரியவர் பற்றி அதே மல்லிகை இதழில் எழுதவைப்பார். ஜீவா, பலரிடம் படம் கேட்டு அலைவதும் குறிப்புகள் எழுதுவதற்கு ஆட்களைத்தேடுவதும் நான் நேரில் கண்ட காட்சிகள். ஆனால் , படங்கள் கிடைத்தாலும் குறிப்புகள் எழுதுவதற்கு பொருத்தமான ஆட்கள் கிடைக்கமாட்டார்கள். இதனால் ஜீவா சலிப்படைந்துமிருக்கிறார். இறுதியில் அவரே எழுதிவிடுவார்.

அதனால் அவசரக் குறிப்புகளைத் தான் காணமுடிந்திருக்கிறது. இராசரத்தினம் விடயத்திலும் அதுதான் நடந்தது. இராசரத்தினத்தின் படைப்புகளை மதிப்பீடு செய்யும் குறிப்புகளை அந்தப் பதிவு கொண்டிருக்கவில்லை. இராசரத்தினத்தை நன்கு தெரிந்தவர்கள் எழுதியிருக்கவேண்டும்.

ஜீவாவின் குறிப்பு மேம்போக்காக சிறு அறிமுகமாகவே வெளியானது வருத்தமளித் தாலும், அதனையிட்டு நாம் ஜீவாவை குறைசொல்ல முடியாது. எனினும் ஜீவா அந்தக்குறிப்பின் இறுதியில் தமது ஆதங்கத் தையும் இவ்வாறு தெரிவித்துள்ளார்: – புதிய தலைமுறையினருக்கு இராசரத்தினத்தின் படைப்பகளில் கணிசமான பகுதி இன்னமும் தெரிந்திருக்கவில்லை. நமது விமர்சகர்கள் இதுவரையில் செய்திருக்காதது இதற்கொரு காரணமாகும். இவரது ஆற்றல் மதிக்கப்படவேண்டியதொன்றாகும்.

இராசரத்தினமும் இலக்கியத்தில் பல் துறைகளிலும் ஈடுபட்டவர். ஆசிரியப்பணியில் இருந்தவாறே வீட்டில் ஓர் அச்சுக்கூடம் வைத்து தமது நூல்களை பதிப்புச்செய்தார். இன்றுபோல அக்காலத்தில் கணினி இல்லை. வெள்ளீய அச்செழுத்துக்களைக் கோர்த்து அச்சிடும் காலத்தில் அவர் தமது நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

அவரது கிரௌஞ்சப்பறவைகள் – ஒரு காவியம் நிறைவேறுகிறது முதலான நாவல்கள் வீரகேசரி பிரசுரமாக வெளியானவை.

அவரது நூல்கள் சில பின்வருமாறு: துறைக்காரன் , கொழுகொம்பு , கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது , ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (நாவல்) தோணி




(சிறுகதைத் தொகுதி) பூவரசம் பூ (மொழி பெயர்ப்புக் கவிதை) மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (சரித்திரம்) இலக்கிய நினைவுகள் ( கட்டுரைகள்).

இராசரத்தினம் மறைந்த பொழுது நான் ஆஸ்திரேலியாவில் இருந்தேன். அவரது மறைவுச்செய்தி அறிந்ததும் அவரது வீட்டுத் தொலைபேசி இலக்கம் தேடி எடுத்து தொடர்பு கொண்டு அவரது உறவினர்களிடம் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்தேன்.




2004 சுனாமி கடற்கோள் அனர்த்தத்தின் பொழுது கிழக்கு மாகாணத்திற்கு உதவி நிவாரணப்பொருள்களுடன் சென்ற வேளையில் ஒருநாள் இரவு திருகோணமலையை வந்தடைந்தேன். அங்கே அதே இரவு திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைச்செயலாளரும் எனது நீண்ட கால நண்பருமான செல்லப்பா சிவபாத சுந்தரம் அவர்களை சந்தித்து உரையாடியபொழுது பேச்சுவாக்கில் வ. அ.இராசரத்தினம் பற்றியும் குறிப்பிட்டேன்.

உடனே அவர், உங்களுக்கு அவரைத் தெரியுமா...? எனக்கேட்டார். எனக்கு தெரிந்தவற்றைச் சொன்னேன். உடனே வீட்டினுள்ளே சென்று இராசரத்தினம் எழுதி இறுதியாக பதிப்புச்செய்யப்பட்ட இலக்கிய நினைவுகள் நூலை எடுத்துவந்து தந்தார். சிவபாதசுந்தரம் ஒரு நூலகர். பன்குளம் பிரதேச நூலகத்திலும் பணியாற்றியவர். சிறந்த சமூகப்பணியாளர்.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் எமது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் மாணவர் கண்காணிப்பாளராகவும் 1988 –1992 காலப்பகுதியில் செயற்பட்டவர். அவர் அங்கம் வகிக்கும் அன்பர் நிதியம் என்ற அமைப்பே குறிப்பிட்ட நூலை வெளியிட்டது. போர்க்காலத்தில் அடிக்கடி இடம்பெயர்ந்துகொண்டிருந்த இராசரத்தினம் நிம்மதியாகவும் அமைதியாகவும் இருந்து அந்த நூலை எழுதுவதற்கு கிடைத்த இடம் திருகோணமலை நகரசபை நூல் நிலையத்தின் ஒதுக்குப் புறமான மேல்மாடிதான்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதியிருப்பவர் தகைமைசார் பேராசிரியர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப் பீடாதிபதி மௌனகுரு.

அறுபது ஆண்டுகளே மனிதர் வாழ்வின் சராசரி வயதெனக்கொண்டால் அவர்களது அறுபதாவது ஆண்டில் எஞ்சி நிற்பவை அவர்கள் ஆற்றிய செயல்களும் அதற்கும் மேலாக அச்செயல்களால் அவர்கள் பெற்ற அனுபவங்களுமே. இந்த அனுபவங்களே வாழ்க்கை பற்றி கருத்துரு ஒன்றை அவர்களுக்குள் தோற்றுவிக்கின்றன என்னும் பேராசிரியர் மௌனகுருவின் கூற்று அர்த்தமும் ஆழமும் மிக்கது.

1925இல் பிறந்து 1946 இல் தமது 21 வயதில் இலக்கியப்பிரதிகளை எழுதத் தொடங்கிய வ.அ.இராசரத்தினம் தமது மறைவு வரையில் எழுதிக்கொண்டே இருந்தார். தினக்குரல் ஞாயிறு இதழில் பொச்சங்கள் என்ற தலைப்பிலும் அவர் இறுதியாக நீண்ட தொடரை எழுதி ஓய்ந்தார். சென்னை மித்ர வெளியீடு இராசரத்தினத்தின் துறைக்காரன் நாவலை அழகாக வெளியிட்டிருக்கிறது.

அவருடைய படைப்பு இலக்கியங்கள் குறித்த முழுமையான மதிப்பீடுகள் எதிர்காலத்தில் வெளியாகவேண்டும். பல்கலைக் கழகங்களில் தற்காலத்தில் பணியாற்றும் தமிழ்த்துறை பேராசிரியர்கள்இராசரத்தினத்தை இன்றைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆய்வுகளில் ஈடுபடுவதற்குத் தூண்டலாம்.

வாழ்க்கையில் போராடி போராடி இழப்புகளை எதிர்கொண்டவாறே நினைவுகளை தந்து மறைந்த வ.அ. இராசரத்தினத்தின் படைப்புகளும் அவர்தம் நினைவுகளும் தான் எம்மிடம் எஞ்சியிருக்கின்றன.

(தொடரும்)

## கொழும்பில் இரு பெண்கள் உட்பட ஐவர் கைது!

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் இரு பெண்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கிராண்ட்பாஸ் மாவத்தை பகுதியில் வைத்தே இவர்கள் ஐவரும் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடமிருந்து சுமார் 70 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான 650 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் மாவட்டத்திலும் அதிகமான மழைவீழ்ச்சி!



தற்போது நாடு முழுவதும் நிலவும் மழையுடனான வானிலை நிலைமை தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பி.ப 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மத்திய வடமத்திய ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் 100 மி.மீக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்கு மற்றும் தெற்குக் கரையோரப் பிரதேசங்களில் பல இடங்களில் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மாகாணத்தின் உள்ளகப் பகுதிகளிலும் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில பிரதேசங்களிலும் காலை வேளையில் பனிமூட்டம் எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதுளை, பசறை பிரதேசங்களில் மண் சரிவு அபாயம்!

அடைமழையுடன் கூடிய காலநிலையினால் பதுளை மற்றும் பசறை ஆகிய பிரதேசங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு மேலும் கோரியுள்ளது.

# அத்தியாவசிய உணவு போல் வடபகுதியில் கேரளக் கஞ்சா



## வடிவேல் சுரேஷ் எம்.பி. ஆதங்கம்

கொழும்பு, ஒக்ரேபர் 07

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கேரளக் கஞ்சாவின் பாவனை அதிகரித்துவிட்டதாகவும், இரு மாகாணங்களுக்கும் இது பெரும் சாபக்கேடாக அமைந்துள்ளது எனவும் வடிவேல் சுரேஸ் எம்.பி. ஆதங்கம் தெரிவித்தார்.**

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, ஆசிரியர் தின நிகழ்வு நேற்றுப் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் பவானி ரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் அதிதியாகக் கலந்துகொண்டு, பாடசாலையின்கட்டடத்துக்குநிதியையும், ஆசிரியர்களுக்கான நினைவுப் பரிசில்களையும் வழங்கினார். இதன்போது கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடிவேல் சுரேஷ் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் போதைப்பொருளை ஒழிப்பதற்கும், தடுப்பதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் சபைக் கூட்டங்களில் தடுமாறுகின்றனர்.

இந்தக் கஞ்சாப் பாவனை வடக்கில் அத்தியவசிய உணவு போல் பழகிவிட்டது. மலையக மக்கள் எவ்வாறு கோதுமை மாவில் ரொட்டியை ஆரம்ப உணவாக உட்கொள்கிறார்களோ அதேபோல் வடக்கில் கஞ்சாவின் பாவனை அதிகரித்துள்ளது.

இதேபோல் மலையகத்திலும் இவ்வாறான நிலை உருவாகும் என அச்சமாக உள்ளது. போதைப்பொருளின் பாவனை மலையகத்தில் அதிகரித்துவிட்டால் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மலையகத்தை மீட்டெடுப்பது பாரிய கஷ்டமாகும்.

இதேபோன்று பதுளையில் போதைப்பொருள் பாவனை ஆரம்பமாகியுள்ளது. இதில் ஆண் பிள்ளைகள் மட்டுமில்லாமல் பெண் பிள்ளைகளும் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

பதுளையில் உள்ள பிரபல பாடசாலைகளில் இவ்வாறான போதைப்பொருள் பாவனை காணப்படுவதாகநான்அறிந்தேன்.

இதனால் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களும் சரி, வீட்டில் பெற்றோர்களும் சரிபிள்ளைகளின் கல்வி தொடர்பிலும், அவர்களின் நடவடிக்கை தொடர்பிலும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

அவர்களைத் தவறான பாதைக்குக் கொண்டு செல்வதற்கு நாம் ஒருபோதும் துணையாக இருக்கக்கூடாது –என்றார்.(ஐ)





நேற்று முன் தினம் வெளியிடப்பட்ட தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் அகில இலங்கை ரீதியில் 198 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தை பெற்றுக் கொண்ட யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மனோகரன் திகழொளிபவன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி நவாஸ்கன் நதி ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேரில் சென்று வாழ்த்தினார். (ஐ)

# கொழும்பு குப்பை புத்தளத்துக்கா? முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கொடி

கொழும்பு, ஒக். 07

கொழும்பு குப்பைகளை புத்தளம் மாவட்டத்தில் கொண்டுவந்து கொட்டும் திட்டத்தை மறுபரிசீலித்து, அதற்கான மாற்றுவழி குறித்து அரசு சிந்திக்கவேண்டும்.

புத்தளம் மக்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதுதான் இதற்கான பரிகாரமாக அமையும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அருக்காடு பிரதேசத்தில் குப்பை கொட்டுவதற்கு எதிராக புத்தளம் மக்கள் 7 நாள்களாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திவரும் நிலையில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் முதலாவது அரசியல்வாதியாக நேற்று முன்தினம் இரவு மக்களின் போராட்டக் களத்துக்கு நேரடியாக விஜயம் செய்து அங்குள்ளவர்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்துகொண்டார்.

அதன்பின்னர் புத்தளம் நகரசபை மண்டபத்தில் நகரபிதா கே.ஏ. பாயிஸ் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:–

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளைப் புத்தளத்திலுள்ள அருவக்காடு எனும் பிரதேசத்தில் கொட்டுவதற்கு எதிராகப் புத்தளம் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். இதன் பாரதூரத்தை அறிந்து, அவசரமாகக் கையாள வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கின்ற காரணத்தினால் நான் இங்கு வந்திருக்கின்றேன்.

சூழலுக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் அச்சுறுத்தலாகவுள்ள இந்தத் திட்டத்துக்கு எதிராகக் கட்சி, இன, மத பேதங்களுக்கு அப்பால், புத்தளம் மக்கள் அனைவரும் ஏகோபித்த அடிப்படையில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினையை யாரும் மூடி மறைத்து அரசியல் செய்ய முடியாது.

சில மாவட்டங்களில் குப்பைகளைச் சொந்த மாவட்டத்திலேயே கொட்டுவதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், கொழும்பிலுள்ள குப்பையை 80 மைல் தூரம் கடந்துவந்து புத்தளத்தில் கொட்டுவது என்பது நியாயமற்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்தக் குப்பைகளை அருவக்காட்டில் கொட்டுவதற்கு தனியான ரயில், இயந்திரம் போன்வற்றை கொள்வனவு செய்வதற்கு தற்போது கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அரசு தீவிர முனைப்புக் காட்டி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பில், அதன் திட்டப் பணிப்பாளருடன் நான் கதைத்தேன். மீதொட்டமுல்ல குப்பைகளை அருவக்காட்டில் கொட்டிவிட்டு, அதன்பின் சேகரிக்கப்படும் குப்பைகளை பிறிதொரு இடத்தில் கொட்டுவதாகத்தான் ஆரம்பத்தில் பேசப்பட்டது என்ற விடயத்தை அவரிடம் சொன்னேன்.

இல்லை, கொழும்பில் தினமும் சேகரிக்கப்படும் 120 தொன் குப்பைகளை அருவக்காட்டில் கொட்டுவதற்கான திட்டம் 2014 முதல் போடப்பட்டுள்ளது. அதற்கான முயற்சிகள்தான் தற்போது நடைபெற்றுவருகின்றன என அவர் என்னிடம் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தினால்தான் மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இது மாத்திரமின்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் புத்தளத்துக்கு சென்றபோது பேசிய சில விடயங்களும் அங்குள்ள மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளன. இந்நிலையில் இப்பிரச்சினை தொடர்பில் அரசியல் ரீதியான முடிவுகளை நாங்கள் எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# போராட்டக் களமாக மாறுகிறது மலையகம்

## சம்பள உயர்வு கோரி நேற்றும் போராட்டம்

கொழும்பு, ஒக். 07

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி நேற்று மஸ்கெலியா பிரவுண்லோ, சீட்டன், லக்கம் ஆகிய மூன்று தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 500இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மஸ்கெலியா பிரவுண்லோ மற்றும் லக்கம் ஆகிய பகுதிகளில் இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணித்தியாலயம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காலம் தாமதிக்காமல் சம்பள உயர்வை அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் அதிகாரிகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

சம்பள உயர்வு இன்றி பாதிக்கப்படும் தொழிலாளர்கள் மட்டுமன்றி அவர்களின் பிள்ளைகளும் மந்த போனத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பள உயர்வை அதிகரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து மலையகத்தில் பல பாகங்களில் கடந்த சில நாள்களாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். நகரில் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஒக். 07

சிறையில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி யாழ். நகரில் துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது.

யாழ். நகரின் மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்றுச் சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசியல் கைதிகளின் உயிர்களைக் காக்கவேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வரு



கின்ற இந்தப் போராட்டங்கள் பொது அமைப்புகளால் முன்னெடுக்கப்படுகின்றன. (ஐ-7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.